JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர்: 13 | இதழ்: 02 | ஏப்ரல் 2022 | ஆண்டு சந்தா ₹100/




# மீட்பு

## INDEX


04 என் நினைவுகள் அல்ல... கர்த்தரின் நினைவு பெரிது!

12 காயப்பட்ட இயேசு

20 கல்வித்துறை

26 Petra


வாலிபர் உலகம்

**இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனி எங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!**

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன் SMS மூலமாகவோ Whats app மூலமாகவோ **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்

**வாலிபர்களே! உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகுந்த மாற்றத்தைக் கொண்டு வரும் இப்பத்திரிக்கையை நீங்கள் தவறாமல் வாசியுங்கள். நீங்கள் வாசித்தபின் இப்பத்திரிக்கையை உங்கள் நண்பர்களுக்கும் வாசிக்கக் கொடுங்கள்!**

## 30,000 வாலிபர்கள் கையில் தவழும் வாலிபர் உலகம் பத்திரிகை உங்கள் கையில் உள்ளதா?

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் **சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்!** Mo/ Cheque / DD "Jesus Redeems Youth Ministry" என்ற பெயரில் தூத்துக்குடி அல்லது திருநெல்வேலி கிளை பெயரில் எடுத்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு உங்கள் சந்தாவை அனுப்பவும். நீங்கள் பணம் செலுத்திய பின்பு, உங்களது பெயர், முகவரி மற்றும் ரசீதை **9750955547** என்ற எண்ணிற்கு தெரியப்படுத்துங்கள்.

| | |
|---|---|
| A/c. Name | : JESUS REDEEMS YOUTH MINISTRY |
| A/c. No. | : 054100710400515 |
| BANK | : TAMILNAD MERCANTILE BANK LTD., |
| BRANCH CODE | : Prahasapuram, Nazareth |
| BRANCH CODE | : 000054 |
| IFS CODE | : TMBL0000054 |
| MICR CODE | : 627060021 |
| SWIFT CODE | : TMBLINBBTUT |


**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333
Cell:9750955547
youth@jesusredeems.org
www.jesusredeems.com
www.youthworld.in



**ஆசிரியர்:** மோகன் சி. லாசரஸ் **இணை ஆசிரியர்:** அவினாஷ் **ஆசிரியர் குழு:** ஜிஷ்யா | ரேச்சல் | கிளாடிஸ் ரவி | சுமா | கெத்சி | காலேப் | வயலா | சதீஷ் | ரேச்சல் செல்வகுமார் | ரெபேக்கா
**வடிவமைப்பு:** ஜாஷ்வா | **நிர்வாகம்:** பெனீட்டா | ஜெயா

# தலைவாசல்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு, என் அன்பின் வாழ்த்துக்கள்!

சுமார்400 ஆண்டுகளுக்கு முன்பாக அடிமைத்தனம் என்ற சமுதாயக்கேடு அமெரிக்காவில் தலை விரித்தாடிய சமயம். அந்த மாபெரும் சமுதாயக் கேட்டை அமெரிக்காவை விட்டு அகற்ற, ஆபிரகாம் லிங்கன் பெரும் பாடுபட்டார். வடபகுதி, தென்பகுதி என்று இரண்டு சிகரமாக இருந்த காலமது. 1862ஆம் ஆண்டு பதவியேற்ற இரண்டு ஆண்டுகளில் அனைத்து அடிமைகளும் விடுவிக்கப்படுவர், அதன்பின் அமெரிக்காவில் அடிமைத்தனம் இருக்கக்கூடாது என்று பிரகடனம் செய்தவர்.

1863 ஜனவரி முதல் நாள் அன்று ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க கூட்டு மாநிலங்களில் (Confederacy) அடிமைகளை நிரந்தரமாய் விடுவிக்கப் புரட்சிகரமான ''விடுதலை பிரகடனம்'' (Emancipation Proclamation) ஒன்றை வெளியிட்டரர். அதை எதிர்த்து நிராகரித்த 11 தென் பகுதி மாநிலங்களுக்கும், அந்த முடிவை வரவேற்ற மற்ற வட பகுதி மாநிலங்களுக்கும் அமெரிக்கா உள்நாட்டுப் போர் தொடங்கியது. ஆனாலும் அனைத்தையும் சமாளித்து, அந்த அடிமைத்தனத்தை முற்றிலுமாய் ஒழியப்பண்ணினார் ஆபிரகாம் லிங்கன்.

இதேபோல் தான் நம்முடைய பாவ அடிமைத்தனத்தை முறியடிக்க, பலவிதமான சாபத்திலும் சிக்கி தவிக்கும் மனுகுலத்தை இரட்சித்து மீட்க, இயேசு பரலோகத்தை விட்டு, பூமியில் ஒரு சாதாரண மனிதனாய் பிறந்து, நன்மை செய்பவராய் சுற்றித் திரிந்து, ஜனங்களுக்கு போதித்து, பல அற்புதங்களை செய்து, அவர்களின் கண்ணீரைத் துடைத்து, அந்தகார இருளில் இருந்தவர்களை ஆச்சரிய ஒளிக்குள் வரவழைத்தார். அதற்காக தன்னுடைய வாலிப வயதில் இரத்தத்தையே கொடுத்தார். ஜனங்களை மீட்கத் தன்னையே ஒரு பாவ நிவாரண பலியாக தந்தார். மரித்து மூன்றாம் நாள் உயிர்த்து, பரலோகத்திற்கு ஏறி பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து இன்றைக்கும் நமக்காக பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

உங்களையும், என்னையும் மீட்ட நம் தேவனுக்கு, ஓர் ஓயாத இதய துடிப்பு உண்டு. அது என்னவென்றால், **நான் உண்டாக்கிய என் ஜனம் என்னை இன்னும் அறியவில்லையே என்ற பாரம் தான்.**

ஜனங்களின் மன கதவை திறக்க **தேவனாகிய நான் ஆயத்தம்.** ஆனால் அவர்கள் அனைவருக்கும் என் அன்பைச் சொல்ல வேண்டிய வாலிபனாகிய **நீ என்ன செய்துக் கொண்டிருக்கிறாய் !**

**கொத்தடிமைத்தனம் நம் தேசத்தை விட்டு, மெல்ல மெல்ல மறைந்துக் கொண்டிருக்க,**
**பாவ அடிமைத்தனம் பெருகிக் கொண்டே போக காரணம் என்ன?**
**அழியும் ஆத்துமாக்கள் உலகில் பல உண்டு,**
**அதற்காய் பரிதபிக்க இன்றைக்கு யார் உண்டு!**

**உன்னை மீட்ட இரட்சகரின் பாரத்தை உணர்ந்து செயல்பட**

## எழும்பி வா!

**இந்த உயிர்த்தெழுதலின் மாதத்தில் உயிர்த்தெழுந்த நம்மீட்பாரின் மாறா அன்பை மறைக்காமல், மறுக்காமல் முழுமனதோடு சொல்வாயா?**

கிறிஸ்துவின் பணியில்
அவினாஷ்

சாட்சி: ஜிஷ்யா

# என் நினைவுகள் அல்ல... கர்த்தரின் நினைவு பெரிது!



சகோதாரி ஜெயப்ரியா

**கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் கர்த்தருக்குப் பிரியமில்லாத வாழ்க்கை வாழ்ந்த சகோதரியை தனது 8வது வயதில் V.B.S. மூலமாக கர்த்தர் இடைபட்டு, இன்றைக்கு ஆண்டவருக்காக வைராக்கியமாக ஊழியம் செய்து வருகிறார்கள். கர்த்தரை ஏற்றுக்கொண்ட பின்பு அவர்கள் வாழ்க்கையில் உண்டான மாற்றங்கள் என்ன என்பதை அவர்கள் நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.**

### உங்களது குடும்பம் பற்றி சொல்லுங்களேன்?

நான் தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் திரு. செல்லத்துரை, திருமதி. கிரேஸ் ஜூலியா தம்பதியருக்கு மூத்த மகளாகப் பிறந்தேன். எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள். தகப்பனார் பஞ்சுமில் கம்பெனியில் வேலை செய்து வந்தார்கள். அம்மா வீட்டில் இருந்து எங்களை கவனித்துக் கொள்வார்கள். இதுதான் எனது அழகான குடும்பம்.



ஜெயப்பிரியாவின் குடும்பம்

### உங்களது சிறுபிராயம் பற்றிச் சொல்லுங்களேன்?

என்னுடைய குடும்பம் கிறிஸ்தவ குடும்பமாயிருந்ததால் எனக்கு கிறிஸ்தவம் என்பது ஒரு புதிதான ஒன்றல்ல. கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்திருந்ததால், பாடல்கள் பாட பிடிக்கவில்லை என்றாலும் சிறுவயதிலிருந்தே என் தாயார் ஆலயத்தில் நடக்கும் புதுவருட ஆராதனையின் எல்லா நிகழ்ச்சியிலும் கலந்துக் கொள்ள என்னைக் கட்டாயப்படுத்துவார்கள். அந்தக் கட்டாயத்தின் பேரில் சபையில் வசனம் சொல்லுவது, பாடல் பாடுவது என்று இருந்தேன். நான் 4, 5ம் வகுப்பு படிக்கும்போதே, சினிமாப் படங்கள் பார்ப்பது, பாடல்கள் கேட்பது, தோழிகளோடு சேர்ந்து சினிமாப் பாடல்களைப் பாடுவது என்று தான் என் தனிப்பட்ட வாழ்க்கை இருந்தது. என்னைப் பொறுத்தவரை கடவுள் என்பவர் ஒருவர் இல்லை என்பது தான் எனது எண்ணமாக இருந்தது.

### சரி...கட்டாயத்தின் பேரில் ஆலயத்திற்கு சென்று கலந்து கொள்வீர்கள்...அப்படீன்னா எப்போது இரட்சிக்கப் பட்டீர்கள்?

நான் கொஞ்சம் நன்றாகவே படிக்கின்ற மாணவி தான். நான் படிக்கவில்லை என்றாலோ, அதிக மதிப்பெண் எடுக்கவில்லை என்றாலோ என் தாயார் என்னை அடிப்பார்கள். அதற்கு பயந்து நான் படிப்பதுண்டு. வெளியே தெரியாமல் அதிக சேட்டைகள் செய்வதும் உண்டு. நான் ஒருபக்கம் வகுப்பில் உள்ள மாணவ, மாணவிகளோடு போட்டியிட்டு படிப்பேன். இன்னொரு பக்கம் என் வாழ்க்கையில் நிம்மதி இல்லை. அதிகமான சினிமா பாடல்கள் பாட ஆரம்பித்தேன். ஒரு சினிமாவை 10 முறைக்கு மேல் பார்ப்பேன். இப்படியே போய்க் கொண்டிருந்த சமயத்தில் தான் நான் 8ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது, எங்கள் சபையில் நடந்த V.B.S. ஒன்றில் கலந்து கொண்டேன். அங்கு தேவன் தரிசனமாக எனக்கு வெளிப்பட்டு, என்னைத் தொட்டார். அன்றைக்கே என் வாழ்க்கையை தேவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்தேன். இயேசு கிறிஸ்து என் உள்ளத்தில் வந்தார். என்னுடைய படிப்பு இன்னும் வித்தியாசமாக மாற ஆரம்பித்தது.



### சூப்பர்... 8ம் வகுப்பில் தேவனை ஏற்றுக் கொண்டீர்கள்... இரட்சிக்கப்பட்ட பிறகு உங்கள் வாழ்வில் என்னென்ன மாற்றம் உண்டானது?

இயேசு அப்பாவுக்கு என்னை ஒப்புக்கொடுத்த பிறகு, நான் அதிகமாக வாஞ்சையோடு சபைக்கு செல்ல ஆரம்பித்தேன். என்னுடைய படிப்பைத் தொடங்கும்முன் பைபிள் படித்து, ஜெபம் செய்து விட்டு தான் தொடங்குவேன். எனக்கென்று ஒரு ஜெபநேரம் இருந்தது. அதை என் 12ம் வகுப்பில் இருந்து செய்ய ஆரம்பித்து, இப்பொழுது வரைக்கும் அந்த ஜெபநேரத்தை தொடர்ந்து செய்துக் கொண்டிருக்கிறேன். ஜெபநேரத்தை தொடர்ந்து செய்ய தேவன் எனக்கு கிருபை செய்து வருகிறார். நீங்களும் கூட இதை செய்து பாருங்கள். தேவன் உங்கள் படிப்பில் இன்னும் அதிகமாக உயர்த்துவார்.

**சரி...இரட்சிக்கப்பட்ட பின்பு உங்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவம் என்ன?**

நான் 8ம் வகுப்பில் இரட்சிக்கப்பட்டு, அன்று தான் இயேசு கிறிஸ்து நல்லவர் என்று புரிந்துக் கொண்டு, என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட அதே வருடத்தில், என் அம்மா கர்ப்பந்தரித்து, பிரிஸ்ஸில்லா பிளஸ்ஸி என்ற 2வது தங்கை பிறந்தாள். நாங்கள் மிகுந்த சந்தோஷத்துடன் இருந்தோம். அந்த சந்தோஷம் ரொம்ப நாட்கள் நீடிக்கவில்லை. அவளுடைய இரண்டரை வயதில், அதாவது நான் 10ம் வகுப்பு படிக்கும்போது, அவளுக்கு இரத்தப் புற்றுநோய் வந்தது. அநேக சிகிச்சை செய்தும் அவளை காப்பாற்ற முடியவில்லை. நான் 10ம் வகுப்பு படிக்கும்போது இறந்து விட்டாள். நான் படித்து ஒரு நல்ல மருத்துவராக வேண்டுமென்ற கனவோடு கடினமாக 10ம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். ஆனால் என் தங்கைக்கு வந்த நோயின் நிமித்தமாக வீட்டிலுள்ள நகை, பணம், கார் எல்லாவற்றையும் விற்று, அவளுக்கு சிகிச்சை செய்தோம். அதனால் என்னுடைய படிப்பும் மிகவும் பாதிக்கப்பட்டது. ஏனென்றால், நானும் என் முதல் சகோதரியும் என் பாட்டி வீட்டில் இருந்து படித்ததால், என் அம்மா, அப்பா, 2வது சகோதரியின் நினைவுகள் அடிக்கடி வந்ததினால், என்னால் படிப்பில் கவனம் செலுத்தி படிக்க முடியவில்லை. அப்போது எனக்கு தெரிந்ததெல்லாம் ஜெபம் செய்வதும், பைபிள் படிப்பது தான். அந்த நேரங்களில் நல்ல நண்பராக, அப்பாவாக, அம்மாவாக, எனக்கு ஒரு நம்பிக்கையாக இருந்தவர் என் அப்பா இயேசு கிறிஸ்து மட்டும் தான். அவரிடம் எல்லாவற்றையும் சொல்லி அழுவேன். அவர் எனக்கு துணையாயிருந்து எனக்கு படிப்பில் உதவி செய்வதைப் பார்த்தேன். எப்படியென்றால், எல்லாருக்கும் 10ம் வகுப்பில் Revision Test வைப்பது போல் எனக்கும் வைத்தார்கள். முதல் Revision தேர்வில் 240/500 மார்க் தான் எடுத்தேன். 2வது Revision தேர்வில் 414/500 மார்க் எடுத்தேன். பொதுத் தேர்வு வருமுன் எங்கள் வீட்டில், மோகன் அங்கிள் தேர்வு எழுதுகிறவர்களுக்காக செய்தி கொடுத்த சி.டி. ஒன்று இருந்தது. அதில் அங்கிள் மூலமாக, **"குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்"** (நீதி. 21:31) என்ற வார்த்தையைக் கொண்டு தேவன் என்னோடு பேசினார். நான் என்னுடைய பொதுத் தேர்வு எழுதுவதற்கு முன்பாக, ''நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்.'' (ஏசாயா 41:10) என்ற வார்த்தையைக் கொடுத்து என்னைப் பெலப்படுத்தினார். அதன்படி, பொதுத் தேர்வில் 452/500 மதிப்பெண்கள் எடுக்கவும், கணித பாடத்தில் 99/100 மதிப்பெண்கள் எடுக்கவும் தேவன் கிருபை செய்தார். உயர்நிலைக் கல்வியில் Maths Biology group எடுத்து படிக்கவும் உதவி செய்தார்.





**சூப்பர்...உயர்நிலைக் கல்வியில் நல்ல group எடுத்து படித்தீர்கள்...பள்ளிப் படிப்பை எப்படி முடித்தீர்கள்,**

11ம் வகுப்பில் நன்றாக படித்தேன். 12ம் வகுப்பு படிக்கும் போது PCOD என்ற (Poly Cystic Ovarian Disease) நோய் ஏற்பட்டதினால், நான் மிகவும் பாதிக்கப்பட்டேன். எப்படியென்றால் பொது தேர்வு எழுதப் போவதற்கு முன்பு, அதாவது காலை 9:30 மணிக்கு நான் தேர்வு அறைக்குள் இருக்க வேண்டு மென்றால், 8:00 மணிக்கு என் வீட்டில் தேர்வுக்கு தயாராகி உட்கரா்ந்திருக்கும் நேரத்தில், அந்த நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டேன். அந்த நோயின் தாக்கத்தினால் இரத்த சோகையாக மாறி விட்டேன். என்னால் சரியாகத் தேர்வு எழுத முடியவில்லை. என் அம்மா, அப்பா, உன்னால் முடிந்தவரை எழுதி விட்டு வா என்று சொல்லி தேர்வுக்கு அனுப்பி வைத்தார்கள். நான் டாக்டராக வேண்டும் என்பதே எனது ஆசையாக இருந்தது. கடைசியில் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 847/1200 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றேன். என் வகுப்பில் என்னைவிட மோசமாக படித்தவர்கள்கூட பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்தார்கள். நான் மிகவும் அழுதேன். ஏன் இயேசப்பா? நான் நன்றாக ஜெபம் பண்ணினேன், உமக்காகத் தானே வாழ்ந்தேன், ஏன்? எதற்கு இப்படி நடந்தது என்று அவரிடம் நிறைய கேள்விகள் கேட்டேன். அப்போது எனக்கு அதற்கு பதில் கிடைக்கவில்லை.

**உங்களுடைய கனவான மருத்துவப் படிப்பு படிக்க மதிப்பெண் கிடைக்கவில்லை... தொடர்ந்து என்ன படித்தீர்கள்?**

எனது கனவு அப்போது நிறைவேறவில்லை. ஆனால் தேவன் என்னை கைவிடவில்லை. எங்கள் குடும்ப டாக்டர் சின்னசாமி பிரபாகரன் அவர்கள் எனக்கு மிகவும் உதவியாக இருந்து, கோவில்பட்டியில் K.R. College of Arts & Science என்கிற கல்லூரி முதல்வரிடம் (Principal) டாக்டர் பேசி, என்னை அந்தக் கல்லூரியில் B.Sc Chemistry எடுத்து படிக்க வைத்தார். கல்லூரி சென்றால் எல்லாம் ஆங்கிலத்தில் தான் படிக்க வேண்டும். ஆங்கிலம் என்பது எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. அதனால் நான் இயேசப்பாவிடம் ஜெபம் பண்ணினேன். எனக்கு நல்ல நண்பர்களை தேவன் தந்தார். அதில் ஜெமிமா பிரின்சிலி என்கிற தோழி, என்னுடைய படிப்பில் மிகவும் உறுதுணையாக இருந்து, எனக்கு ஆங்கிலம் படிக்க, கற்றுக் கொடுக்க உதவி

செய்தாள். கல்லூரிப் படிக்கும் போதே, கல்லூரியில் நடைபெறும் போட்டிகளிலும், விளையாட்டுகளிலும் உயர்த்தினார். இறுதியாக B.Sc முடிக்கும் போது கல்லூயில் 3வது மதிப்பெண் கொடுத்து இயேசு என்னை உயர்த்தினார். இயேசப்பா என்னோடுகூட இருந்து, அவர் என்னை ஜெபிக்க வைத்தது தான் இதற்கெல்லாம் காரணம் என்று என்னால் சொல்ல முடியும்.



**சூப்பர்... இயேசு உங்களுக்கு துணையாக இருந்து கல்லூரிப் படிப்பை படிக்க உதவி செய்தார்... அதன்பிறகு மேற்படிப்பு படித்தீர்களா?**

அடுத்து என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு தெரிந்ததெல்லாம் ஜெபம் செய்வது மட்டும் தான். நான் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று இயேசப்பாவிடம் கேட்டபோது, **"இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்."** (சகரியா 9:12) என்ற வார்த்தையைக் கொடுத்தார். நான் அந்த வசனத்தை அப்படியே விசுவாசித்தேன். அந்த சமயத்தில் எங்களுக்கு படிப்பில் மிகவும் உதவியாக இருந்த கல்லூரி ஆசிரியர் புவனேஸ்வரி அவர்கள் என்னிடமும் என் தோழியிடமும் "University of Madras" என்ற யூனிவர்சிட்டிக்கு Apply பண்ணி, நுழைவு தேர்வுக்காக தயாராகுங்கள், கடவுளின் அருள் இருந்தால் கிடைக்கும் என்று சொன்னார்கள்.



என் அப்பாவிடம் இதைக் குறித்து சொன்ன போது, நீ முயற்சி செய், ஆனால் உன்னை மேற்படிப்புப் படிக்க வைப்பதற்குத் தேவையான பணம் என்னிடம் இல்லை என்றார்கள். நான் இயேசப்பாவிடம் அனுதினமும் இதற்காக ஜெபம் செய்வேன். ஜெபம் செய்வது மட்டுமல்ல, செமஸ்டர் தேர்வு முடிந்து எல்லாரும் வீட்டிற்கு சென்று விடுவார்கள். நாங்கள் 3 நண்பர்கள் சேர்ந்து நுழைவுத் தேர்வுக்காக அநேக புத்தகத்தை குறிப்பு எடுத்து படிக்க ஆரம்பித்தோம். வீட்டிற்கு சென்றாலும் ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் போன் மூலமாக தெளிவுபடுத்தி படித்தோம். எங்கள் 3 பேரில் ஒரு தோழி இந்து குடும்பத்தை சார்ந்தவள். ஆனாலும் அவள் நாங்கள் ஜெபிக்கும் போது, அவளும் எங்களுடன் இணைந்து ஜெபம் செய்வாள். இது எனக்கு மிகவும் ஆச்சரியமாகயிருந்தது. நுழைவுத் தேர்வுக்காக 3 பேரும் சென்னை சென்றோம். தேவன் சொன்னபடியே அந்த யூனிவர்சிட்டியில் எனக்கு இரண்டு குரூப் கிடைத்தது. ஒன்று, MSc. Medical Biochemistry, மற்றொன்று M.Sc. Biomedical genetics. இப்போது இந்த இரண்டில் எதைத் தெரிந்தெடுப்பது என்ற போராட்டம் வந்தது. தேவனின் வழிநடத்துதலின்படி MSc. Medical Biochemistry எடுத்துப் படித்தேன். அது State Government University என்பதால் அவர்களே எனக்கு 8000 ரூபாய் பணம் கொடுத்து படிக்க வைத்தார்கள். வீட்டிலிருந்து மேற்படிப்பிற் கென்று அதிக செலவு செய்ய தேவன் விடவில்லை.



அங்குள்ள பேராசியர் கண்களில் தேவன் கிருபை கிடைக்க செய்து, Project "Gastric Cancer"-ல் முடிக்க கிருபை செய்தார். நான் டாக்டராக வேண்டுமென்று மட்டுமே நினைத்தேன், ஆனால் தேவன் என்னை Medical Research-ஆக உயர்த்தினார். நான் நினைத்துப் பார்க்காத அளவுக்கு தேவன் என்னை உயர்த்தி வைத்தார். **"என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்"** (ஏசாயா 55:8) என்ற வசனம் எவ்வளவு உண்மையானது என்பதை என் வாழ்வில் உணர்ந்தேன்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

உங்கள் வாழ்க்கையை, படிப்பை, தேவனிடம் ஒப்புக்கொடுங்கள். தேவன் நீங்கள் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத, எட்டாத உயரத்தில் உங்களைக் கொண்டு போய் வைப்பார். கர்த்தரின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் போது, கர்த்தர் உங்களையும் உயர்த்துவார். தோல்விகள், சோர்வுகள் வரும்போது தேவனை விட்டு விடாமல், அவரையே சார்ந்து நில்லுங்கள், கர்த்தர் பெரிய காரியங்களை உங்கள் வாழ்க்கையிலும் செய்வார்.

**அன்பான வாலிபர்களே! சகோதரி பிரியாவின் வாழ்க்கையில் எவ்வளவோ அலைகள் வந்த போதிலும், பெருங்காற்று வீசின போதிலும், கர்த்தரை விட்டு விலகாமல், கர்த்தருக்காக தன்னை அர்ப்பணித்து, அவருக்கு கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்ததினால் இன்றைக்கு அவர்கள் நினைத்ததைவிட மேலாக உயர்த்தி ஆசீர்வதித்திருக்கிறார். நீங்களும், இன்றைக்கு உங்களை இயேசுவிடம் ஒப்புக்கொடுங்கள்! மேலான ஆசீர்வாதங்களை பெறுவீர்கள்! ●**



# புலம்பல்
## (கண்ணீரின் நதி)

வேத ஆராய்ச்சி: ரேச்சல்

அன்பான இளம்நெஞ்சங்களே! இந்த மாதமும் பெரிய தீர்க்கதரிசிகள் நூல்களில் மூன்றாம் புத்தகமான ''புலம்பல்'' பற்றி சுருக்கமாக காணலாம்.

## அறிமுகம்

இப்புத்தகம் பாவத்தில் வீழ்ந்த தென்தேசமாகிய யூதாவின் துன்பத்துக்காக அழுதலாகும். இந்தப் புத்தகத்தில் ''ஐயோ!'' என்றதான வார்த்தை முதலாவதாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வார்த்தை வேதனை நிறைந்த மக்கள் உபயோகப்படுத்தும் வார்த்தை. எனவே இந்த அடிப்படையிலே இந்தப் புத்தகம் புலம்பல் என பெயரைப் பெற்றிருக்கலாம். இதிலும் யூதர்களுக்கு வந்த இக்கட்டுகளை கண்கூடாகக் கண்ட தீர்க்கதரிசி கண்ணீரோடு புலம்புவதைக் காணலாம்.

**ஆசிரியர்:** எரேமியா
**காலம்:** 588 கி.மு.
**அதிகாரங்கள்:** 5
**வசனங்கள்:** 154
**வார்த்தைகள்:** 3,415
**முக்கிய நபர்கள்:** எரேமியா.

## புலம்பலில் கிறிஸ்து

- கிறிஸ்து, துக்கம் நிறைந்த மனிதனாக, பாடு அனுபவித்தவரும், அசட்டை பண்ணப்பட்டவரும், அவரது விரோதிகளால் வெறுக்கப்பட்டவருமாயிருந்தார் (1:12; 2:15,16; 3:14,19,30)

- அழிக்கப்பட்ட எருசலேமைப் பார்த்து எரேமியா கண்ணீர் விட்டது, இயேசு எருசலேமைப் பார்த்து கண்ணீர் விட்டதை ஒத்ததாக இருக்கிறது (மத். 23:37,38).

## புலம்பல் – சுருக்கம்

**முதல் பாடல்** எருசலேமின் அழிவு
- தீர்க்கதரிசியின் புலம்பல் (1:1-11 வசனங்கள்)
- எருசலேம் நகரத்தைப் பற்றிய புலம்பல் (1:12-22 வசனங்கள்)

**இரண்டாம் பாடல்**
- தமது ஜனத்தின் மீது ஆண்டவரின் கோபாக்கினை
- தேவனுடைய கோபாக்கினை (2:1-10 வசனங்கள்)
- நூலாசிரியரின் புலம்பல் (2:11-22 வசனங்கள்)

**மூன்றாம் பாடல்**
- துன்பமடைந்த தீர்க்கதரிசி
- அவரது புலம்பல் (3:1-18 வசனங்கள்)
- அவரது நம்பிக்கை (3:19-42 வசனங்கள்)
- அவரது துன்பம் (3:43-54 வசனங்கள்)
- அவரது ஜெபம் (3:55-66 வசனங்கள்)

**நான்காம் பாடல்**
- தோல்வியுற்ற எருசலேம் மக்கள்
- நகரத்தின் முற்றுகை (4:1-12 வசனங்கள்)
- முற்றுகையின் காரணம் (4:13-20 வசனங்கள்)
- எதிர்கால நம்பிக்கை (4:21,22 வசனங்கள்)

**ஐந்தாம் பாடல்**
- புதுப்பிக்கப்படும்படி விண்ணப்பம் செய்தல்
- அறிக்கையிடுதல் (5:1-18 வசனங்கள்)
- விண்ணப்பம் செய்தல் (5:19-22 வசனங்கள்)

Heart Beat

# முயன்றால் ... முடியும்!

ஆலோசனை: அவி

நான் கல்லூரியில் 2ம் ஆண்டு படிக்கிறேன். சிறுவயது முதல் கிறிஸ்துவின் அன்பில் என் பெற்றோரால் வளர்க்கப்பட்டேன். அவ்வப்போது சிறுவர் ஊழியமும் செய்வேன். நன்கு படித்து ஒரு பெரிய IPS அதிகாரியாக வேண்டும் என்பது எனது கனவு. ஆனால் என்னுடன் கல்லூரியில் படிக்கும் சக மாணவன் மூலம் விளையாட்டாக போதைப் பழக்கம் ஆரம்பித்து, இப்பொழுது என்னால் விடமுடியாத அளவுக்கு அடிமைத்தனமாகி விட்டது. என் பெற்றோருக்கு என்னுடைய தவறான பழக்கம் தெரிந்து விட்டது. அவர்கள் எனக்கு எவ்வளவோ அறிவுரை சொல்லியும் என்னால் விடமுடியவில்லை. என்னுடைய சீனியர் ஒரு சிலர், கல்லூரியில் போதை பழக்கத்தால் மாட்டி Dismiss ஆகிவிட்டார்கள். அதேபோல் நானும் மாட்டிக் கொள்வேனோ என்ற பயம் ஒரு பக்கம், மேலும் என்னால் என் பெற்றோருக்கு அவமானம் வந்து விடுமோ என்ற கலக்கமும் இருக்கிறது. என்னால் இதைவிட முடியவில்லை. நான் செய்வது தவறு என்று தெரிந்தும், இந்த பழக்கத்தை விட முடியாமல் மாட்டிக் கொண்டிருக்கிறேன். எனக்கு உதவி செய்யுங்கள் – ராகுல், திருவனந்தபுரம்.




அன்பு தம்பி ராகுல்! உங்களுடைய வேதனையும், கலக்கமும், இந்த தவறான பழக்கத்திலிருந்து மீள முடியவில்லையே என்ற வருத்தமும் நன்கு புரிகிறது. ராகுல், இந்த உலகில் முடியாதது என்று ஒன்றும் இல்லை, முயன்றால் எல்லாம் முடியும் என்ற பழமொழியை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நீங்கள் ஒரு தவறான பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறீர்கள் என்று உணர்ந்ததே நல்ல ஒரு திருப்பம். ராகுல், உங்களுக்கு ஒரு நல்ல செய்தி! நீங்கள் விரும்பினால் மட்டுமே இந்த தீயப் பழக்கத்திலிருந்து வெளியே வர முடியும். மேலும் அதற்கு தேவையான முயற்சிகளை சீராக நீங்கள் செய்யும்போது கண்டிப்பாக இந்த செயலிலிருந்து மீள முடியும். ஆனால் ஒருவேளை இதே தீயப் பழக்கத்தில் நீங்கள் தொடர்ந்தால், அதில் உண்டாகும் ஆபத்தும், விபரீதமும் மிகவும் பயங்கரமாக இருக்கும்.

## ஒருவேளை நீங்கள் தொடர்ந்தால் ஏற்படும் விளைவுகள்...

- நீங்கள் சொன்னது போல, கல்லூரி நிர்வாகம் உங்கள் தீயப்பழக்கத்தை கண்டுபிடித்தால், உங்களைக் கல்லூரி நிர்வாகம் Dismiss செய்ய வாய்ப்பு உண்டு.

▸ இந்தத் தீயப்பழக்கம் காவல்துறைக்கு தெரிந்தால், உங்களுக்கு NDPS (Narcotics Drugs and Psychotropic Substances) Act 1985-யின்படி 10,000 ரூபாய் அபராதமும், 6 மாதம் சிறைத் தண்டனை அல்லது இரண்டும் சேர்ந்து அனுபவிக்க நேரிடும்.

▸ சமுதாயம் உங்களை ஒரு குற்றவாளியாகவும், சமுதாயம் சீரழிவாகவும் பார்க்கும்.




▸ உங்களால் உங்கள் சபைக்கும், குடும்பம் அனைத்திற்கும் பெரிய அவப்பெயர் உண்டாக வாய்ப்பு உண்டு.

▸ மேலும் உங்களின் எதிர்கால கனவு (I.P.S) ஒரு நிமிடத்தில் சுக்குநூறாக உடைந்து போகும்.

▸ ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியாக வேண்டிய நீங்கள், Criminal list-ல் சேர்ந்து, போதைத் தடுப்பு பிரிவில் மாட்டிக் கொள்ளும் அளவிற்கு போக வாய்ப்பு உண்டு என்பதை அறிந்து யோசித்து செயல்படுங்கள்.

அநேக நேரம் நமக்கு இன்பம் கொடுக்கும் பழக்கத்தை நிறுத்த முடியாது. ஆனால் அந்த இன்பம் நம்மை ஒரு படுகுழிக்குள் ஆழ்த்தி அமிழ்த்துவிடும் என்பதை மறக்க வேண்டாம்.

**ஒருவேளை இந்த தீயப் பழக்கத்திலிருந்து வெளியே வந்தால்...**

▸ உங்களின் டிகிரி படிப்பில் எந்த பாதிப்பும் இல்லாமல் படிக்க வாய்ப்பு உண்டு.

▸ மேலும் உங்களின் கனவாகிய ஐ.பி.எஸ். படிப்பை எந்த தடையும், பாதிப்பும் இல்லாமல் படித்து, நல்ல முறையில் தேர்ச்சி பெற்று அதே ஊரில் ஐ.பி.எஸ். அதிகாரியாக வலம் வரலாம்.

▸ உங்களின் பெற்றோருக்கு உங்களால் பெரிய மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். உங்களைக் குறித்து பெரும் மகிழ்ச்சி அடையக்கூடிய வாய்ப்பு உண்டு.



▸ உங்கள் நண்பர்கள் வட்டாரத்திலும், சமுதாயம் மற்றும் சபையிலும் உங்களுடைய மதிப்பும், மரியாதையும் கூடும்.

▸ எந்தப் போதை உங்களை பாதித்ததோ, அதே போதை பழக்கம், மற்ற மாணவ செல்வங்களை பாதிக்காமல் இருக்க, ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியாக வலம் வந்து போதைக் கலாச்சாரத்தையே அடியோடு ஒழிக்கலாம். இப்படி உங்களின் ஒரு சீரான தீர்மானத்தின் மூலம் பல கனவுகள் நினைவாகும். அது மட்டும் வாழ்க்கையில் பாதிக்கும் போதை ஒலித்த பெருமை உங்களை சேரும். எனவே மிகவும் நிதானித்து செயல்படுங்கள்.

**இந்த போதை அடிமைத்தனத்திலிருந்து வெளியே வர சில டிப்ஸ்...**

▸ முதலாவது போதையை உங்களுக்கு கொடுக்கும் நண்பர்களின், உறவை உடனே துண்டித்துக் கொள்ள வேண்டும்.



▸ மொபைல் போனில் அவர்கள் நம்பரை Block செய்யுங்கள்.

▸ அந்த போதையை தூண்டும் பொருளையோ, நபரையோ, இடத்தையோ தவிர்க்க முற்படுங்கள்.

▸ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் தான் அந்த போதைக்கான எண்ணம் வரும். அந்த நேரத்தில் புதிய பழக்கங்களை செய்ய முற்படுங்கள். சைக்கிள் ஓட்டுதல், கிட்டார் வாசித்தல், நடைபயிற்சி, உடற்பயிற்சி போன்ற ஒரு புதிய காரியத்தை செய்யும் போது, உங்களின் மனநிலை மாற வாய்ப்பு உண்டு.

▸ உங்களால் முடிந்தவரை பிஸியாக (Busy) வைத்துக் கொள்ள முயலுங்கள். நீங்கள் சும்மா இருக்கும் நேரம் தான் வீணான எண்ணங்கள் தோன்றும். So Plan your day. And Practice it without fail.

▸ ராகுல்! நீங்கள் நினைத்தால், அந்த பழக்கத்திலிருந்து வெளியே வரலாம். அதற்கு தேவை Constant Practicing mind. So say No strongly to your mind.

▸ அந்த எண்ணம் வரும்போதெல்லாம் ஒரு பாட்டில் தண்ணீர் குடிப்பேன் என்று Alternate-ஆக யோசியுங்கள். எனவே எப்பொழுதும் ஒரு பாட்டில் தண்ணீர் உங்களோடு இருப்பது போல் பார்த்துக் கொள்ளுங்கள்.



▸ இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இயேசப்பா உங்களை மிகவும் நேசிக்கிறார், உங்களை ஒருபோதும் கைவிடமாட்டார் உங்களை விட்டு விலக மாட்டார் என்ற நம்பிக்கையும் விசுவாசமும் வைத்து செயல்படுங்கள்! இயேசு இந்த பழக்கத்திலிருந்து முற்றிலுமாக உங்களுக்கு விடுதலை தருவார். அதனால் விசுவாசத்தோடு ஜெபம் பண்ணுங்கள். வெற்றி நிச்சயம்! விடுதலை விரைவில்! ●




முகப்பு செய்தி: சதீஷ்

# மீட்பு...

கேரளா மாநிலம் பாலக்காடு மாவட்டத்திலுள்ள மலப்புழா பகுதியில் இருக்கும் மலைத்தொடரில், பாபு தன்னுடைய மூன்று நண்பர்களுடன் மிகுந்த உற்சாகத்துடன் தனக்கு நேரிட போகும் பெரிய ஆபத்தை உணராமல் மலையேறும் பயிற்சியில் ஈடுபட்டார். அப்போது யாரும் எதிர்பாராதவிதமாக நடுவழியில் கால் இடறியதில் பாபு தவறி மலையின் இடுக்கில் இருக்கும் குழியில் விழுந்தார். அதிர்ச்சி அடைந்த அவரது நண்பர்கள் செய்வதறியாமல் அங்கும் இங்கும் ஓடி கொடிகள் மற்றும் கயிறுகளைப் பயன்படுத்தி பாபுவை மீட்க முயற்சி செய்தனர். எவ்வளவு முயன்றும் அவர்களால் பாபுவை மீட்க முடியவில்லை. உடனே அவர்கள் மலையின் அடிவாரத்தில் இருக்கும் அப்பகுதி மக்களுக்கும் காவல்துறைக்கும் தகவல் தெரிவித்தனர். போதிய வெளிச்சம் இல்லாததால் காவல்துறை அதிகாரிகளால் மீட்புப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட முடியவில்லை. ஏறக்குறைய 40 மணி நேரத்திற்கும் மேலாக பாபு உணவு, தண்ணீர் இல்லாமல் பகலிலும், இரவிலும் தவித்துள்ளார். இறுதியாக நீலகிரி மாவட்டம் வெலிங்டன் மற்றும் பெங்களூரில் இருந்து இந்திய ராணுவமும், கோவை மாவட்டம் சூலூரிலுள்ள விமானப்படை வீரர்களும் இணைந்து பாபுவை மீட்டு எடுத்தனர்.



ஒரு தனி மனிதனை, அவருடைய நண்பர்களும், காவல்துறையும், தேசத்தின் இராணுவமும் இணைந்து எவ்வளவோ பாடுபட்டு மீட்டு எடுத்துள்ளனர். ஆனால் உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான ஜனங்களை பாவத்திலிருந்து மீட்டு எடுக்க இயேசு ஒருவர் மட்டுமே இந்தப் பூமிக்கு வந்தார். தன் ஜீவனைக் கொடுத்து ஜனங்களை மீட்டார். "(குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ. 1:14). பாபு தனக்கு நேரிடப்போகும் பெரிய ஆபத்தை உணராமல், எப்படி மலையின் குழியில் விழுந்து மாட்டிக் கொண்டாரோ? அதுபோலவே இன்றைக்கும் அநேக வாலிபர்கள், தனக்கு ஏற்படும் ஆபத்தை உணராமல் செல்போன், பேஸ்புக், மொபைல் கேம்ஸ், Drugs, சினிமா, டிவி சீரியல் என்று





உலகத்தில் இருக்கும் பாவக் காரியங்களில் விழுந்து, வெளியே வர முடியாமல், யார் என்னை மீட்டு எடுப்பார்? என்று ஒவ்வொரு நாளும் தவித்துக் கொண்டுள்ளனர். ஒருவேளை நீங்கள்கூட உலகத்தின் ஏதோ ஒரு பாவத்தில் சிக்கி மீள முடியாமல் தவித்துக் கொண்டு இருக்கலாம், பல வருடங்களாக பாவத்திலிருந்து வெளியே வர முயற்சி செய்து தோல்வியுற்று இருக்கலாம், கலங்காதீர்கள்! "...உலகத்தின்



பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய" (யோவான் 1:29) இயேசு கிறிஸ்து உங்களுக்காக சிலுவையிலே தன் ஜீவனைக் கொடுத்து, அவருடைய சொந்த இரத்தத்தை சிந்தி, சாத்தானை ஜெயித்து, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்து இருக்கிறார். உயிர்த்தெழுந்த இயேசு உங்களை எல்லா பாவத்திலிருந்தும் மீட்டு எடுக்க முடியும் என்று நீங்கள் விசுவாசித்து, சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை நோக்கிப் பார்த்தால், நீங்கள் விடுவிக்கப் படுவீர்கள். "உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப்போலவும் அகற்றி விட்டேன்; என்னிடத்தில் திரும்பு; உன்னை நான் மீட்டுக் கொண்டேன்" (ஏசாயா 44:22). இயேசு இல்லாமல் உங்களுக்கு மீட்பும் இல்லை, இரட்சிப்பும் இல்லை என்பதை மறந்து விடாதீர்கள். இயேசு எவ்வளவு பெரிய மீட்பை நமக்குக் கொடுத்து இருக்கிறார் என்பதை சிந்திக்கும்பொழுது, அது நமக்கு மிகுந்த ஆச்சரியமானதாக இருக்கிறது.

ஒரு அடிமை தன்னைத் தானே விடுவித்துக் கொள்ள முடியாது. நாமும்கூட பாவத்திலிருந்தும், பாவ சுபாவத்திலிருந்தும் நம்மை நாமே விடுவித்துக் கொள்ள முடியாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருந்தோம். ஆனால் இயேசுவோ இரக்கமுள்ளவராய் நம்மைத்தேடி வந்து அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கொடுத்து, இரட்சித்தார்.



இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட நீங்கள், என்ன செய்து கொண்டு இருக்கிறீர்கள்? ஒரு காலத்தில் பாவத்திலும், சாபத்திலும் இருந்த உங்களை இயேசு தன் ஜீவனைக் கொடுத்து பாவ அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எடுத்தார். உங்களுக்காக ஜீவனைக் கொடுத்த இயேசுவுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? என்று யோசித்து இருக்கிறீர்களா? உங்களைச் சுற்றி இருக்கும் ஜனங்களை நோக்கிப் பாருங்கள்! பாவ அடிமைத்தனத்திலும், சாபத்திலும் வாழ்ந்து, யார் என்னை இந்த அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எடுப்பார் என்று ஒவ்வொரு நாளும் ஏங்கி தவித்து, உங்கள் கண்கள் காண



நரகத்தை நோக்கி போய்க் கொண்டிருப்பதை நீங்கள் பார்த்து கொண்டுதான் இருக்கிறீர்கள். ஒருவேளை அவர்களுக்கு நீங்கள் உங்களை பாவத்திலிருந்து மீட்ட இயேசுவை சொல்லி இருந்தால் உங்களுக்காக தேவனை துதிக்கிறேன். இல்லையென்றால், உங்களை மீட்ட இயேசுவை இன்றைக்கே தாமதமின்றி அவர்களுக்கு சொல்ல ஆரம்பியுங்கள் என்று உங்களை உற்சாகப்படுத்துகிறேன். சவுலாக இருந்த பவுல் இயேசுவை ஏற்றுக் கொண்ட பின்பு, "தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்" (அப். 9:20). ஆனால் இரட்சிக்கப்பட்டு பல வருடங்களாகியும் இன்னும் இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிக்காமல் இருந்தால் எப்படி? சற்றே சிந்தித்து செயல்பட ஆரம்பியுங்கள்.

**எனக்கன்பான வாலிப தம்பி, தங்கச்சி! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்தப் பூமிக்கு, "...ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத். 20:28). உங்களை முழுநேரமாக வந்து ஊழியம் செய்யுங்கள் என்று நான் சொல்லவில்லை. ஒருவேளை உங்களுக்கு முழுநேர அழைப்பு இருந்தால், தாராளமாக நீங்கள் முழு நேரமாக ஊழியம் செய்யலாம். இல்லையென்றால் நீங்கள் இருக்கும் இடம், பள்ளி, கல்லூரிகள், வேலை செய்யும் இடம், உங்கள் கிராமங்கள் மற்றும் பட்டணங்களில் இருக்கும் ஜனங்களுக்கு மீட்பின் செய்தியை சொல்லி, அவர்களை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் மீட்டு எடுக்க முயற்சி செய்யலாம். 'அறுவடை மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்' என்பதை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். இப்பொழுதே நீங்கள் புறப்பட்டுப் போய் மீட்பின் செய்தியை ஜனங்களுக்கு சொல்ல ஆரம்பியுங்கள். உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களோடு இருக்கிறார். இனியும் தாமதம் செய்ய வேண்டாம் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன் ●**



# காயப்பட்ட இயேசு!

செய்தி: சகோ. மோகன் சி. லாசரஸ்

அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்போனார். அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டுபக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள் (யோவான் 19:17,18). இந்த உலகத்தில் மனிதனாய் வந்து ஜனங்களுக்கு நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்து, ஒரு பாவமும் செய்யாதவர், ஏன் சிலுவையில் மரிக்க வேண்டும்? இயேசுவின் நாட்களில் ரோம அதிகாரிகள் ஆட்சி செய்து கொண்டிருந்தார்கள். ரோம அரசாங்கத்திற்கு விரோதமாக யாராவது கலகம் பண்ணினாலும், அல்லது கொலை, கொள்ளை போன்ற கொடூரமான குற்றங்களை செய்தாலும், பலவிதமான கொடூரமான தண்டனைகளை கொடுப்பார்கள். அதில் ஒரு தண்டனை தான் சிலுவை மரணம். ரோம போர் சேவகர்கள் கடின இருதயம் கொண்டவர்கள். இரக்கத்தை அவர்களிடத்தில் பார்க்க முடியாது. அடித்து, கொடூரமாய் வேதனைப்படுத்தி சிலுவையை தோளில் சுமந்துக் கொண்டு வீதி வழியாய், கொல்கொதா என்ற இடத்தில் சிலுவையில் அறைவரர்கள். வஸ்திரங்களை களைந்து, கைகளில், கால்களில் ஆணிகள் அடித்து, சிலுவையைத் தூக்கி நிறுத்தி, அவன் செய்த குற்றத்தை எழுதி, சிலுவையின் மேல் வைத்து விடுவரர்கள். அந்த வழியாய் போகிறவர்கள் பார்த்து, இவன்தான் அரசாங்கத்திற்கு விரோதமாய் கலகம் பண்ணினவன் என்று அவன் செய்த குற்றத்தை சொல்லி பரிகாசம் பண்ணுவரர்கள்.







பரிசுத்தமுள்ள தேவன், பாவமே செய்யாதவர், குற்றமற்றவர், இயேசு ஏன் சிலுவை சுமந்து கொண்டு போய், இப்படிப்பட்ட கள்ளர்களுக்கு நடுவில் குற்றவாளிப் போல சிலுவையில் தொங்கி மரிக்க வேண்டும்? அவரை விசாரித்த நூற்றுக்கு அதிபதியாகிய ரோம அதிகாரி, இவரிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்பதாக சொல்கிறார். அவர் நீதிமான் என்பதாக நீதிபதியின் மனைவி சொல்கிறாள். குற்றமில்லாத இரத்தத்தை காட்டிக் கொடுத்த நான் தான் பாவம் செய்து விட்டேன் என்று யூதாஸ்காரியோத் சொல்கிறான். அதனால் அவர்மீது சுமத்த ஒரு குற்றமும் இல்லை. ஆனால் அவரை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்து விட்டார்கள்.



காரணம் என்ன தெரியுமா? இயேசு சிலுவையில் மரிப்பதற்கு தம்மைத் தானே ஒப்புக்கொடுத்தார் என்று கலாத்தியர் 1:4ம் மற்றும் எபேசியர் 5:2ம் வசனங்கள் சொல்கிறது. அவருடைய உயிரை யாருமே எடுக்க முடியாது. யோவான் 10:18ம் வசனத்தில், என் ஜீவனைக் கொடுக்கவும், அதை திரும்ப எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு என்று இயேசு சொன்னபடி, தன்னுடைய சிலுவையில் தன் ஜீவனைக் கொடுத்தார். மூன்றாவது நாள் மறுபடியும் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார். வேதத்தில் சொல்லப்பட்ட காரியங்கள் அப்படியே நிறைவேறிற்று.



## ஏன்? எதற்காக? கடவுள் மனிதனாய் வந்து அப்படி மரிக்க வேண்டும்? அப்படி ஏன் இரத்தம் சிந்தி தன்னை பலியாய் கொடுக்க வேண்டும்?

வாலிப சகோதரனே! வாலிப சகோதரியே! நீங்கள் கிறிஸ்தவராக இருக்கலாம், கிறிஸ்தவரல்லாதவராக இருக்கலாம், கடவுள் நம்பிக்கைகூட இல்லாதவராக இருக்கலாம். உங்களுக்காக, உங்கள் நன்மைக்காக, உங்கள் ஆசீர்வாதத்திற்காக, உங்களை நரகத்தின் அக்கினியில் இருந்து காப்பாற்றுவதற்காக, உங்களுக்கு சுகம் கொடுக்க, உங்களுடையப் பாடுகளை மாற்றுவதற்காக, உங்கள் துக்கங்களை சந்தோஷமாய் மாற்ற சிலுவையில் இயேசு தன்னை பலியாக கொடுக்க உலகத்திற்கு வந்தார்.



## எனக்காக இயேசு ஏன் சிலுவையில் இரத்தம் சிந்தி மரிக்க வேண்டும்?

உங்கள் துக்கத்தை சந்தோஷமாய் மாற்றத்தான் இயேசு சிலுவையில் தன்னை பலியாய் கொடுத்தார். அதனால்தான் இன்றைக்கு துக்கங்கள் நீங்கி, அற்புதமான விடுதலை சுகத்தை பெற்று, சந்தோஷத்தை அடைந்து வருகிறார்கள் என்கிற சாட்சிகளை நீங்கள் கேட்கிறீர்கள். என் துக்கம் நீங்காதா? என் வாழ்க்கையில் இந்த வேதனைகள் மாறாதா? எனக்கு ஒரு நல்ல காலம் பிறக்காதா? என்று கலங்கிக் கொண்டிருக்கிறீர்கள் அல்லவா!

உங்களுக்காக தான் வாலிப சகோதரி, சகோதரனே! உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுப்பதற்காக, உன் துக்கத்தை சந்தோஷமாக மாற்ற இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி மரிக்க தன்னை ஒப்புக்கொடுத்தார்.

## எதற்காக இந்த தழும்புகள்?

அவருடைய தழும்புள்ள கரத்தினால் நம்மை தொட்டு குணமாக்குகிறார். நமக்கு பாவத்தில் இருந்து விடுதலை கொடுக்க, அவர் இரத்தம் சிந்தினார். நோயிலிருந்து நமக்கு சுகம் கொடுக்க, அவர் தழும்புகளை ஏற்றுக்கொண்டார் மனிதனுடைய பிரச்சனையே அவர்களுடைய வியாதி தான்.

ஆம் பிரியமானவர்களே! இயேசுவின் கரம் தொடும்போது வல்லமை வெளிப்படுகிறது என்று மத்தேயு 8:17ம் வசனம் சொல்கிறது, இயேசு கிறிஸ்து நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களை சிலுவையில் சுமந்தார். அவர் நம்முடைய பாவங்களை மாத்திரம் சுமக்கவில்லை, நம்முடைய நோய்கள், நம்முடைய பெலவீனங்கள், நம்முடைய சரீரத்தை தாக்குகிற எல்லா வியாதி வேதனைகளை சிலுவையில் சுமந்து, தன் சரீரத்தில் காயப்பட்டு அவர் தழும்புகளை ஏற்றுக்கொண்டார் அந்த தழும்புள்ள கரத்தினால் தொட்டு சுகம் கொடுக்கிறார்.

வெளிநாட்டில் வேலைக்குப் போன ஒரு சகோதரனுக்கு திடீரென்று வலது கால் செயலற்று நடக்க முடியாமல் போய்விட்டது. இனி நடக்க முடியாது என்று மருத்துவர்கள் சொன்னதால், இந்தியாவிற்கு வந்தார். மருத்துவமனைக்கு வீல்சேரில் கொண்டு போனார்கள்.

அவருடைய எலும்பில் டிஸ்க் விலகி இருப்பதால், ஆபரேஷன் செய்தால் தான் அவர் நடக்கிறதையே சொல்ல முடியும் என்று சொன்னார்கள். ஆப்ரேஷனுக்கு தேதி குறித்து விட்டடார்கள். அந்த நேரத்தில் தான் டிவி நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்த அவருடைய மனைவியும், அவர்களுடைய சகோதரிமார்களும், நடக்க முடியாமல் மருத்துவமனையில் இருக்கிற என் கணவரை என் சகோதரரை தொடும் என்று வீட்டில் பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டே ஜெபிக்கிறார்கள். இவர்கள் ஜெபிக்கிற அதே நேரம் மருத்துவமனைக்குள் ஒரு கரம் அவரை தொடுகிறது. அந்நேரமே, அவர் எழும்பி நடக்க ஆரம்பித்தார். நடக்கமுடியாமல் நொண்டியாக இருந்தவரை, ஒரு நிமிஷத்தில் இயேசு சுகமாக்கி நடக்கப் பண்ணினார். இயேசுவின் தழும்புள்ள கரம் தொட்டவுடன் அற்புத சுகம் உண்டாகிறது. நாம் சுகமாய் இருப்பதற்காகத் தான் குற்றமறியாத இயேசு தழும்புகளை ஏற்றுக்கொண்டடார்.




**ஜெபிக்கிற அதே நேரம் மருத்துவமனைக்குள் ஒரு கரம் அவரை தொடுகிறது. அந்நேரமே, அவர் எழும்பி நடக்க ஆரம்பித்தார்.**

**பிரியமானவர்களே! சிலுவையில் இயேசு நம்முடைய நோய்கள் எல்லாவற்றையும் சுமந்து விட்டடார். இன்றைக்கு ஏதோ ஒரு வியாதி உங்களை கஷ்டப்படுத்துகிறதா? எந்த வியாதியாகவும் இருந்தாலும், பயப்படாதீர்கள்! இயேசு சிலுவையில் நோய்களை சுமந்து விட்டார் அவருடைய தழும்புகளால் குணமாகிறீர்கள். ஜெபிக்கும்போது, இயேசு தம்முடைய தழும்புள்ள கரத்தினால் தொட்டு குணமாக்குகிறார். எனக்காக சிலுவையில் நோய்களை சுமந்து விட்டீர், உம்முடைய தழும்புகளால் நான் குணமாகிறேன் என்பதை விசுவாசியுங்கள்! உங்களுக்காகக் காயப்பட்ட இயேசுவை நோக்கிப் பாருங்கள், அற்புத விடுதலையை கர்த்தர் கட்டாயம் தருவார்!** ●

இயேசு விடுவிக்கிறார்

வாலிபர் உலகம்




சத்தியம் TV சனிக்கிழமை 6:30am
7am Youtube மற்றும் Comforter TV யிலும் பார்க்கலாம்

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.
அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட
ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!

9750955547

Sathiyam TV YouTube Comforter DIGITAL CHANNEL



# வேதாகம
## புதையல் வேட்டை

கீழே கொடுக்கப்பட்டுள்ள வார்த்தைகளின் எதிர்ச்சொல்லை கண்டறிந்து, இரு வார்த்தைகளும் அடங்கிய ஒரே வசனத்தை கண்டுபிடித்து, வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

1. சிறுக ×
2. தாழ்வு ×
3. வால் ×
4. குறைவு ×
5. பலமுள்ளவன் ×
6. பெரியோர் ×
7. துவக்கம் ×
8. மரணம் ×
9. தீமை ×
10. விதைப்பு ×

பதில் வந்துசேர வேண்டிய கடைசி நாள்

**15.04.2022**

**துக்கம் x சந்தோஷம்**
**“உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்”**
**(யோவான் 16:20)**

கடந்த மாத வெற்றியாளர்

**அபிஷேக்**
திருச்சி

வெற்றிபெறும் ஒரு நபருக்கு Ear phone பரிசு வழங்கப்படும்

JESUS REDEEMS YOUTH MINISTRIES,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org


சாதனை: சுமா




# தோல்வியை தோற்கடிக்கலாம்

**தங்களுடைய அழகான சிறகை விரித்து சாதனை பயணம் மேற்கொள்ள ஒவ்வொரு நாளும் தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கும் எதிர்கால சாதனையாளர்களுக்கு வாழ்த்துக்கள். நீங்கள் இன்னும் சிறகை விரித்து உயரத்தில் செல்வதற்கு இன்று நாம் பார்க்க இருக்கும் சாதனையாளரின் வாழ்க்கை உங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.**

கலிபோர்னியா மாவட்டத்தில் பிறந்த Richard Mantanez, ஒரு படுக்கையறையை மட்டுமே கொண்ட அடுக்குமாடி வீட்டில் தன்னுடைய அப்பா, அம்மா மற்றும் தன்னுடைய பத்து உடன்பிறப்புகளுடன் வாழ்ந்தார். ரிச்சர்ட்டின் பெற்றோர் திராட்சைப் பழங்களைப் பறித்து அதை விற்று அந்தப் பணத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தனர். ஆனால் இந்த சிறு பணம் இவர்களின் வாழ்க்கைக்கு போதுமானதாக இல்லை. ரிச்சர்ட் தன்னுடைய சிறு வயதில் எந்தவொரு பொருட்களையும் சொந்தமாக வாங்கினதில்லை. யாரோ ஒருவர் உபயோகித்து விட்டு வேண்டாம் என்று ஒதுக்கும் பொருட்களையே பயன்படுத்தி வந்தார். ரிச்சர்ட் படிக்கும் பள்ளியில் அனைத்து மாணவர்களும் நன்றாக ஆங்கிலத்தில் பேசுவார்கள். ஆனால் இவருக்கோ ஆங்கிலம் சுத்தமாக வரவில்லை. நண்பர்கள் ரிச்சர்ட்டை கிண்டல் செய்வதால் 3ம் வகுப்புப் படிக்கும்போதே, பள்ளிக்கு போகமாட்டேன் என்று அடம் பிடித்தார். கடைசியாக 4ம் வகுப்பில் படிப்பை கைவிட்டார்.



பள்ளிக்குச் செல்லாமல் அன்றாட உணவுக்காக சுட்டெரிக்கும் வெயிலில் வயல் வேலை, கோழிப் பண்ணையில் வேலை, கார் கழுவும் வேலை போன்ற பல்வேறு வேலைகளைத் தளராமல் செய்து கொண்டு வந்தார். எத்தனை வேலைகள் பண்ணினாலும் ரிச்சர்ட் குடும்பத்தில் உள்ள வறுமை மட்டும் மாறவில்லை. இதனால் பெரிய வேலை ஒன்றைத் தேட ஆரம்பித்த போது, ரிச்சர்டின் நண்பரின் மூலமாக இவருக்கு ஒரு கம்பெனியில் தரை துடைக்கும் வேலை கிடைத்தது. அந்த வேலைக்கு அப்ளிகேஷன் எழுத தன்னுடைய மனைவியிடம் உதவியைக் கேட்டு எழுதுகிறார். பள்ளிப் படிப்பை பாதியில் விட்டது பெரும் தவறு என்பதை அன்று தான் உணர்ந்தார். ரிச்சர்ட் தன்னுடைய 18ம் வயதில் ஒரு கம்பெனியில் தரை துடைக்கும் வேலையை மேற்கொண்டார். தரை தானே சுத்தம் பண்ண வேண்டும் என்று அலட்சியமாக செய்யாமல் மிக நேர்த்தியாகவும், மிக சுத்தமாகவும் எப்பொழுதும் தரையைத் துடைக்கத் தொடங்கினார். ரிச்சர்ட் தரை துடைக்கும் பணி என்று நினைக்காமல் எப்போதும் சிறப்பாக சுத்தம் செய்ய வேண்டும் என்று உறுதியாக இருந்தார். ரிச்சர்ட் வேலைப் பார்த்த Frito_Lay கம்பெனி நஷ்டத்தில் போக ஆரம்பித்தது.



இந்த நேரத்தில் Frito_Lay கம்பெனி உரிமையாளரிடம் இருந்து ஒரு அறிக்கை வருகின்றது. இனி இந்த கம்பெனியில் வேலை பார்க்கும் ஒவ்வொருவரும் தங்களை இந்த கம்பெனியின் முதலாளிகளாக நினைத்து வேலை செய்ய வேண்டும் என்று கூறுகிறார். இதனைக் கேட்ட

பணியாளர்கள் அனைவரும் வழக்கம் போல கேட்டு அந்த அறிக்கையை விட்டு விடுகின்றனர். ஆனால் 10 வருடம் அந்த கம்பெனியில் தரை துடைக்கும் வேலைப் பார்த்த ரிச்சர்ட், தன்னை முதலாளியாக நினைத்து வெற்றிக் காண தன்னுடைய முயற்சியைத் தொடங்குகின்றார்.

ரிச்சர்ட் Frito_Lay கம்பெனியின் விற்பனை மேலாளரிடம் சென்று நீங்கள் கடைகளுக்கு போகும் போது, மறக்காமல் என்னையும் அழைத்துப் போங்கள் என்று கூறினார். ஒருநாள் ரிச்சர்ட்டும், அந்த கம்பெனியின் விற்பனை மேலாளரும் ஒரு கடைக்குப் போனார்கள். ரிச்சர்ட் கடையை சுற்றிப்பார்க்கையில் Lays, Frito போன்ற பொருட்கள் விற்பனையாகாமல் இருப்பதையும், அதிகமாக Maxican Spice அதிகம் விற்பனையானதையும் கண்டார். ரிச்சர்ட் மூளையில் திடீரென்று ஒரு யோசனைப் பிறந்தது. நாம் Cheetos-வில் அதிக Spicy சேர்த்து, இதை அமெரிக்கா முழுவதும் இருக்கிற மக்களை சாப்பிட வைக்க வேண்டும் என்று நினைத்தார். சரி நமக்கு இது தேவையில்லாத வேலை என்றும் நினைத்தார். ஆனாலும் நாம் இந்த கம்பெனியின் உரிமையாளராக செயல்பட வேண்டும் என்று எண்ணி தன்னுடைய சிந்தனையை மாற்றினார்.



ஒருநாள் கம்பெனியில் ஒரு செட் Frito's மீந்து விட்டது. ரிச்சர்ட் அதை தன் வீட்டிற்கு எடுத்து வந்து அதில் அதிக சுவையான மசாலாவை சேர்த்தார். தான் தயார் செய்த Frito's-யை நண்பர்களுக்குக் கொடுத்தார். இவர் தயார் செய்த சுவை அனைவருக்கும் பிடித்துப் போனது. அதனால் இந்த Frito's-யை Frito_Lay உரிமையாளரிடம் கொடுக்க முடிவு செய்து, அவருக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, Fritolay CEO-வின் உதவியாளர் ரிச்சர்டின் போன்காலை எடுத்து அவரை அறிமுகப்படுத்தி விட்டு, அவரிடம் நீங்கள் எந்த பிரிவில் வேலை பார்க்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ரிச்சர்ட், கலிபோர்னியாவில் (California) என்று பதில் அளித்தார். அப்போது கலிபோர்னியாவிலுள்ள கம்பெனியை மேற்பார்வையிடும் துணை தலைவர் நீங்கள் தானா? என்று கேட்டார். அதற்கு நான் தொழிற்சாலையில் தரை துடைக்கும் வேலை பார்க்கிறவர் என்று சொன்னதும், CEO-வின் உதவியாளர் எதுவும் பேசாமல், காத்திருங்கள் என்று சொல்லி விட்டு CEO-விற்கு போனை Connect செய்தார். ரிச்சர்ட் CEO-விடம் Frito-ல் Spicy சேர்ப்பது பற்றி தன்னுடைய யோசனையை வெளிப்படுத்தினார். உடனே CEO இரண்டு வாரத்தில் நான் அங்கே இருப்பேன் என்று சொல்லி போன்காலை துண்டித்தார். சிறிது நேரத்தில் தொழிற்சாலை மேலாளர் வேகமாக ரிச்சர்ட்டிடம் வந்து என்ன காரியம் பண்ணியிருக்கின்றனர் என்று கோபம் கொள்ள ஆரம்பித்தார். இரண்டு வாரத்திற்குள் CEO-க்கு முன்பாக நீ presentation பண்ண வேண்டும், உன்னை தயார் படுத்திக்கொள் என்று கூறினார். ரிச்சர்ட்டுக்கு பெரும் இடி தலையில் விழுந்தது போல இருந்தது.

எழுதப் படிக்கத் தெரியாத நாம் எப்படி presentation செய்வது என்று புலம்பிக் கொண்டே வீட்டிற்குச் சென்று மனைவியிடம் சொன்னார். ரிச்சர்ட் மனைவி Cheetos-யை பாக்கெட்டில் போட்டு ரிச்சர்ட்ரிடம் கொடுத்து, Marketing star அவருக்கு சொல்லி கொடுத்தார். ரிச்சர்ட் முதன்முதலாக 3 டாலருக்கு Tie வாங்கி கட்டிக் கொண்டு மீட்டிங்கிற்கு சென்றார். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு presentation பண்ணினார். இறுதியில் ஒருத்தர் ரிச்சர்டிடம் எவ்வளவு வருமானம் ஈட்டப் போகிறீர்கள்? என்று கேட்டார். சிறிது பதற்றமடைந்த ரிச்சர்ட் தன்னுடைய சிறுவயதில் நடந்ததையெல்லாம் நினைத்து, தன்னுடைய கைகளை அகல விரித்து இவ்வளவு வருமானம் என்று சொன்னார். பிறகு CEO, இனி நீ தரைத் துடைப்பதை நிறுத்திவிட்டு, எங்களுடன் இணைந்துக் கொள் என்றார். ரிச்சர்ட் சொன்ன யோசனையை நகரின் ஒரு பகுதியில் நடைமுறைப்படுத்தினர். அதுவே மில்லியன் டாலர் கணக்கில் வருமானம் கிடைத்தது. பிறகு ரிச்சர்ட்டின் Cheetos அமெரிக்கா முழுவதும் பரவி பெரும் லாபத்தை ஈட்டியது. இன்று ரிச்சர்ட் Pepsico-வில் துணை தலைவராகவும் (Vice President), MBA மாணவர்களுக்கு பாடம் நடத்துகின்ற ஆசிரியராகவும் இருக்கின்றனர்.

**நாம் எந்தவொரு தொழிலைச் செய்தாலும், அதில் உண்மையாகவும், நேர்மையாகவும், கடின உழைப்புடன் இருந்தால் நிச்சயம் வெற்றி நம்மை வந்து சேரும். தோல்வியை தோறகடிக்க நீங்கள் தயாரா? சின்ன வேலையை வைத்து என்ன சாதிக்க போகிறோம் என்று நினைக்காதீர்கள். சாதிக்க ஏற்ற வேளை வரும், அதுவரை இருக்கும் இடத்தில் கடுமையாகவும், உண்மையாகவும் இருக்கும் போது ரிச்சர்ட் போல உயர்த்தப்படுவீர்கள்!** ●

# ராகாப்



ராகாப் வேதாகமத்தில் எதிர்பாராத பாத்திரங்களில் ஒன்றாகும். யோசுவா எரிகோவை இரகசியமாய் வேவு பார்க்கும்படி இரண்டு மனிதரை அனுப்பினார். அவர்கள் ராகாப் என்னும் வேசி வீட்டில் தங்கினார்கள். இஸ்ரவேல் புத்திரரில் சிலர் தேசத்தை வேவுபார்க்க வந்திருந்தபோது, ராகாபிடம் தன் ஆட்களை அனுப்பினார். ராஜாவின் ஆட்கள் அவரிடம் தேசத்தை வேவுபார்க்க வந்தவரை வெளியே கொண்டுவா என்றனர். அதற்கு ராகாப் அவர்கள் இங்கே வந்தது உண்மை தான். ஆனால் யார் என்று எனக்குத் தெரியாது. இரவு நேரத்தில் புறப்பட்டு சென்றனர். எங்கு சென்றனர் என்று தெரியவில்லை. அவர்களை சீக்கிரமாய் போய்த் தேடுங்கள் பிடித்துவிடலாம் என்று திசைதிருப்பினாள் (யோசுவா 2:3-5). அந்த ராஜாவின் ஆட்கள் அவ்வாறே சென்றனர், கண்டுபிடிக்க முடியவில்லை. ராகாப் இஸ்ரவேல் மனிதருக்கு தயை பாராட்டி அவர்களை தன் வீட்டின் மேல் மறைத்து வைத்திருந்தாள். அவர்கள் புறப்படும் முன் அவர்களிடம் சத்தியம் வாங்கி கொண்டாள். உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர். ஆகையால் எங்கள் தேசத்தை கைப்பற்றும்போது என்னையும் என் தகப்பன், தாய், சகோதர, சகோதரிகளை உயிரோடே வைக்க தயவு பாராட்ட வேண்டும் என்றார். அதற்கு அவர்கள் கர்த்தர் எங்களுக்கு தேசத்தை கொடுக்கும்போது, நாங்கள் தயையும், சத்தியமும் பாராட்டுவோம் என்றார்கள் (யோசுவா 2:14). அதேபோல் ராகாபும் அவள் குடும்பமும் தப்பினார்கள்.

வாலிபர்களே! ராகாப் ஒரு வேசியாக இருந்தாலும், இஸ்ரவேலின் தேவன் மேல் வைத்த நம்பிக்கையால், தான் மட்டும் அல்லாமல் தன் குடும்பம் அனைத்தையும் மீட்டுக் கொண்டாள். நீங்கள் எப்பேர்பட்டப் பாவியாக இருந்தாலும் தேவனை நம்புங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தையும் தேசத்தின் அழிவிலிருந்து மீட்டுக் கொள்வார்!

# யோனா



யோனா ஒரு தீர்க்கதரிசி. அவருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, "நீ எழுந்து நினிவே நகரத்துக்குப் போய் பிரசங்கி, அவர்கள் அக்கிரமம் மிகுதியாயிருக்கிறது, அவர்களை அழித்து விடுவேன்" என்று கூற சொன்னார். ஆனால் யோனா, அவர்கள் மனந்திரும்புவார்கள், தேவன் அவர்களை அழிக்கமாட்டார் என்று பயந்து, தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் தர்ஷீசுக்குச் செல்லும் கப்பல் ஏறி, பயணம் செய்தார். கப்பலில் இருந்து தூக்கி வீசப்பட்ட யோனா இராப்பகல் 3 நாள் மீனின் வயிற்றில் உயிரோடிருந்து தன்னை அர்ப்பணித்து ஜெபித்தார். கர்த்தர் கட்டளையிட்டதால் யோனாவை மீன் கரையிலே கக்கியது. அதன்பின் யோனா கர்த்தருடைய வார்த்தையை இரண்டாந்தரம் கேட்டு நினிவேக்கு சென்று அவர்களுக்கு வரப்போகும் அழிவை பிரசங்கித்தார். இதைக் கேட்ட நினிவே நகரத்தார் அனைவரும் புசியாமலும் குடியாமலும் உபவாசம்பண்ணி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டு மனந்திரும்பினர். அவர்கள் கிரியைகளை பார்த்து கர்த்தர் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கை செய்யாதிருந்தார். நினிவே நகரம் யோனாவின் பிரசங்கத்தால் மீட்கப்பட்டது.

அன்பான வாலிபர்களே! யோனாவின் அர்ப்பணிப்பால் 1,20,000 பேர் மனந்திரும்பி அழிவிலிருந்து மீட்கப்பட்டனர். நாமும் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, நம்மை முழுமையாக அர்ப்பணித்தால், நம்மை கொண்டு அழிவிலிருக்கும் பல லட்சம் ஆத்துமாக்களை தேவன் மீட்டுக் கொள்வார். செவிகொடுப்போம்! அர்ப்பணிப்போம்!

சிந்தனை சிதறல்: ரெபேக்கா

# ரோலன்ட் பின்க்காம்

ஆப்பிரிக்காவின் மிஷனெரி சரித்திரம். இங்கிலாந்து தேசத்தில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த ரோலன்ட் தனது குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, கனடா நாட்டிற்கு வேலை தேடிச் சென்றார். அங்கு ஆண்டவரின் அழைப்பைப் பெற்று, தன்னை மிஷனெரியாக அர்ப்பணித்தார். தேவன் தன்னை சூடான் தேசத்திற்கு மிஷனெரியாக அழைப்பதை உணர்ந்தவர், மூன்று பேருடன் பயணத்தை ஆரம்பித்தார். வழியில் மலேரியா காய்ச்சலால் தடைப்பட்டு நின்றது. எனவே இவர் இங்கிலாந்து திரும்பி விட்டார். இரண்டாவது பயணமும் பல தடைகளால் பாதியில் நின்றது. இதைக் குறித்து ரோலன்ட் கூறும்போது, " தேவன் போல் உள்ள எனது விசுவாசம் அடித்தளம் வரை ஆட்டம் கண்டது. இறுதியாக உறுதியான கற்பாறையாகிய இயேசுவின்மேல் விசுவாசம் வைக்க கற்றுக் கொண்டேன்". 1895ல் வேதாகம கல்வி கற்ற இவர், 1898ம் ஆண்டு "சூடான் உள்நாட்டு மிஷன்" என்ற மிஷனெரி சங்கத்தை நிறுவினார். இவரது மூன்றாவது மிஷனெரிப் பயணம் வெற்றியாக அமைந்தது. ஐந்து வருட ஊழியத்தில் பத்தாயிரத்திற்கும் அதிகமான விசுவாசிகள், 100க்கும் மேற்பட்ட ஆராதனைக் குழுக்கள், இவையாவுமே ஊழியத்தின் வளர்ச்சியை வெளிப்படுத்தியது. தடைகளை பாராது ஓடியதால் அநேக ஆத்துமாக்களை தேவனுக்காக மீட்டுக் கொண்டார்.



வாலிபர்களே! ஊழியம் செய்ய பல தடைகள் வந்தாலும், சோராது தொடர்ந்து ஓடும்போது, தேவன் அநேகரை மீட்டுக் கொள்கிற ஒரு பாத்திரமாக உங்களை பயன்படுத்துவார். விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்! உங்களை கொண்டு அநேகரை தேவன் மீட்டுக் கொள்வார்!

# ஏமி கார்மிக்கேல்



ஓர் மாலை நேரத்தில் "ஊழியத்திற்குப் புறப்பட்டுப் போ" என்ற சத்தம் கேட்டு அர்ப்பணித்து ஜப்பான் நாட்டை நோக்கி தன் பயணத்தைத் தொடர்ந்தார். ஏமி கார்மிக்கேல் அம்மையார் 15 மாதங்கள் ஊழியத்தை முடித்து இலங்கை சென்று பணியாற்றினார். அக்காலத்தில், இந்தியாவில் தேவதாசி முறைகள் பின்பற்றப்பட்டு, சமுதாயம் சீரழிந்துக் கொண்டிருந்தது. இம்மக்களை மீட்கவோ, ஆதரவுக் கொடுக்கவோ யாரும் முன்வராத, 1895ம் ஆண்டு இந்தியாவை நோக்கி, இச்சீரழிவைத் தடுக்க சீற்றத்துடன் புறப்பட்டார். சிறுமிகள் மற்றும் பெண்களைப் போன்று சிறுவர்களும் ஆலயங்களுக்குப் படைக்கப்பட்டு, நாடகக் கம்பெனிகளுக்கு விலைக்கு விற்கப்பட்டனர். இத்தகைய ஒழுக்கமற்ற வாழ்வை தடுக்க 1926ம் ஆண்டு "டோனாவூர் ஐக்கியத்தை நிறுவினார். ஏமி கார்மிக்கேல் திக்கற்றவர்கள், விதவைகள், துன்பப்படுவோர், ஒழுக்கங்கெட்டவர்கள், ஆதரவற்றோர் போன்றவர்களுக்கு புகலிடம் தந்து, அவர்களுக்குக் கிறிஸ்துவின் அன்பைச் செயல் வடிவத்தில் காட்டினார் 56 வருடங்களாக இந்தியாவில் நசுக்கப்பட்டவர்களுக்காகவே சேவை செய்த இவர், 38 நூல்களை எழுதியுள்ளார். அவைகளில் பல நூல்கள் 20 ஆண்டுகள் எலும்புமுறிவினால் தாம் படுத்தபடுக்கையாக இருக்கும்பொழுது எழுதியவையே.

அன்பான வாலிபர்களே! விலையேறபெற்ற மீட்பை ஏமிகார்மிக்கேல் அம்மையார் தமிழ்நாட்டில் வாழ்ந்த பல மக்களுக்கு இலவசமாக பெற்றுத் தந்தா. தன்னுடைய தியாகத்தால், திருமணம் பண்ணி கொள்ளாமல், தைரியமான ஒரு பெண்ணாக தேவனுக்காக இவ்வளவு பெரிய காரியம் செய்ய முடியும் என்றால் உங்களாலும் முடியும். தேவனுக்காக தைரியமாய் எழும்பி பிரகாசியுங்கள். உங்களை கொண்டு தேவன் அநேகரை மீட்கும் கருவியாக பயன்படுத்துவார்! உயர்த்துவார்!




# Revival

## கல்வித்துறை

எழுப்புதல் செய்தி: சதீஷ்

உலகத்தில் அதிகமான மாணவர்களைக் கொண்ட நாடு நாம் வாழும் இந்திய தேசமாகும். ஏறக்குறைய 32 கோடி பேர் பள்ளிக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களாக உள்ளனர். நமது தேசத்தில் வரப்போகும் கடைசிக் கால எழுப்புதலில் பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு முக்கியப் பங்கு உள்ளது. சிறுபிள்ளைகள் முதல் வாலிபர்கள் வரை அநேகர் மீது இன்று ஜெப ஆவி ஊற்றப்பட்டு இருப்பதால் பல மணி நேரங்கள் ஜெபிக்கிற பிள்ளைகளாக மாறியுள்ளனர். குறிப்பாக அன்றைக்கு மிஷனெரிகளால் தொடங்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடக்கும் ஜெபங்களின் விளைவாக பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஜெபிக்கிற ஜெபவீரர்களாக உருவாகி உள்ளனர். கால்டுவெல் மேல்நிலைப் பள்ளியில் தன்னுடைய பள்ளிப் படிப்பை தொடங்கிய பேட்ரிக் ஜாஷ்வா அவர்கள் பத்தாம் வகுப்பு படிக்கும் போது இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். பள்ளியில் படிக்கும் போது ஜெபிக்கிற இளம் வாலிபனாக திகழ்ந்தார். பின் நாட்களில் இவர் மூலமாக ஜெப எழுப்புதல் ஊற்றப்பட்டு, ஜெபிக்கிற ஜெப வீரர்களாக அநேகர் உருவாகியுள்ளனர். இவர் மட்டுமின்றி எமில் ஜெபசிங் அண்ணன் அவர்களும், தங்களுடைய கல்லூரி நாட்களில் படித்துக் கொண்டே வாலிபர்கள் மத்தியில் ஜெபக்குழுக்களை உருவாக்கி அநேக வாலிபர்களை ஜெபிக்க வைத்தார். கல்லூரிப் படிப்பில் சிறந்து விளங்கிய எமில் ஜெபசிங் அவர்கள் சாயர்புரம் கல்லூரியில் பேராசிரியர் பணி செய்து கொண்டே திரளான வாலிபர்களை சேர்த்து கொண்டு, கிராமங்கள் தோறும் சென்று சுவிசேஷம் அறிவித்து அநேகரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தினார்.



இவர் மூலமாக தமிழ்நாட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வாலிபர்கள் மத்தியில் மாபெரும் எழுப்புதல் உண்டானது. ஆண்டவர் இவர்களை பயன்படுத்த மிக முக்கிய காரணம் என்ன தெரியுமா? இவர்களின் ஜெப ஜீவியமே. இளம் வயதிலேயே சாட்சியுள்ள வாழ்க்கை, பரிசுத்தமுள்ள வாழ்வு போன்றவற்றால் அநேக வாலிபர்களை கிறிஸ்துவுக்குள் ஈர்த்தனர். நீங்களும் இவர்களைப் போல பயன்படுத்த வேண்டுமானால், படிக்கும் இளம் வயதிலேயே நன்றாக ஜெபிக்கவும், பரிசுத்தமுள்ள வாழ்க்கை வாழவும், உங்களை ஒப்புக் கொடுக்கும் போது, ஆண்டவர் உங்களையும் பயன்படுத்துவார் என்பதில் சந்தேகம் இல்லை.



''வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்'' (சங்கீதம் 127:5) என்று வேதம் சொல்லுகிறது. மாணவர் பருவம் நம்முடைய வாழ்க்கையில் ஒரேயொரு முறைதான்

கிடைக்கிறது. இந்த பருவத்தில் உங்களிடத்தில் இருக்கும் திறமைகள், வலிமை, மனஉறுதி இவை யாவற்றையும் ஆண்டவருக்காக கொடுக்கும் போது, அவர் உங்களை எப்படி பயன்படுத்த விரும்புகிறாரோ, அப்படியே பயன்படுத்துவார். தன் இளம் வயதில் பாபிலோன் தேசம் சென்ற தானியேலும் அவருடைய நண்பர்களும், பாபிலோனின் பாவங்களுக்கு தங்களை ஒப்புக்கொடாமல் பரிசுத்தமாய் வாழ வேண்டுமென்று, தன் இருதயத்தில் தீர்மானித்து அதில் நிலைத்து நின்றனர். இவர்கள் தங்களுக்கு கிடைத்த ராஜபோக வாழ்க்கையை நிராகரித்து, தங்களை ஆண்டவருக்கென்று அர்ப்பணித்தபடியால், கர்த்தர் இவர்களைக் கொண்டு பாபிலோன் தேசத்தையை அசைத்தார்.



எனக்கன்பான வாலிப தம்பி, தங்கச்சி! நம்மை படைத்த ஆண்டவர் நம் வாழ்க்கையில் அருமையான பருவங்களை நமக்கு கொடுத்து இருக்கிறார். அதில் மிகவும் முக்கியமான பருவம் இந்த மாணவப் பருவம். எனவே பள்ளிக் கல்லூரிகளில் படிக்கும் நீங்கள் ஜெபிக்கிறவர்களாவும், சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களாகவும் உங்களை அர்ப்பணிக்கும்போது, உங்கள் மூலம் நீங்கள் படிக்கும் பள்ளிக் கல்லூரிகளில் மாபெரும் எழுப்புதல் உண்டாகும். "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமா யிருக்கிறீர்கள்" (மத். 5:14). உங்களுக்குள் இருக்கும் வெளிச்சம் பாவ அடிமைத்தனத்திலும், இருளிலும் இருக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களை வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாற்றும் என்று விசுவாசித்து செயல்படத் துவங்குங்கள். நீங்கள் படிக்கும் பள்ளிக் கல்லூரிகளில் எழுப்புதல் அக்கினியை உங்கள் மூலம் பரவச் செய்யுங்கள்! ●


Revival IGNITERS 2021

# எழுப்புதலை பரவச் செய்வோர் பயிற்சி முகாம்!

வாருங்கள்! பங்கு பெறுங்கள்!
வரப் போகிற எழுப்புதலில் பிரகாசிப்பீர்கள்!

பதிவுக் கட்டணம் ₹ 200/

~~மே 11 - 13~~

ஜூன் 21 - 23

21ம் தேதி செவ்வாய் காலை 9 மணி முதல்
23ம் தேதி வியாழன் பகல் 1 மணி வரை

இடம்: தேவனுடைய கூடாரம், நாலுமாவடி.

15 வயதுமுதல் 35 வயது வரை

தேர்ந்தெடுக்கப்படும் வாலிப சகோதர சகோதரிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.


Cell: 81110 41000. Ph: +91 04639 35 35 35.
eMail: revival@jesusredeems.org
Onlineல் பதிவு செய்ய: revival.jesusredeems.com



பயிற்சியாளர்கள்:

சகோ. மோகன் சி. லாசரஸ்.

சகோ. வின்சென்ட் செல்வக்குமார்.



# வேதாகமத்தில் பறவைகள்

# புறா

நிகழ்வு கெத்சி கிளார்வின்

பறவைகள், விலங்குகள், ஊரும் பிராணிகள் என்று ஆண்டவர் எல்லாவற்றையும் படைத்தார் என்று வேதத்தில் படிக்கிறோம். ஆனால் நாம் 5 அறிவு படைத்த எவற்றையும் கண்டு கொள்வதில்லை. கர்த்தர் எல்லாவற்றிற்கும் ஒரு விளக்கம் கொடுத்தும் காண்பித்திருக்கிறார்.



புறா அனைவரும் விரும்பும் ஒரு மென்மையான பறவை இனமாகும். ஆண்டவராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது அவர் மீது புறா வடிவில் பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்தார் (மத். 3:16) என்று வாசிக்கிறோம். பரிசுத்த ஆவியானவரின் அடையாளமாக புறா அமைந்தது. நோவாவையும் அவருடைய குடும்பத்தாரையும் காப்பாற்றியபோது, வெள்ளம் வற்றியதைக் குறிக்கும் வகையில் புறா தன் அலகில் ஒலிவக் கிளையைக் கொண்டு வந்து செய்தி சொன்னதை நாம் பார்க்கிறோம் (ஆதி. 8:1-12). இப்படிப்பட்ட புறாவினிடத்தில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்களைக் குறித்து இம்மாதத்தில் பார்ப்போம்...



## கபடற்றது, எதிர்த்து போரிடாது

ஒரு கோழியைப் பிடித்தோமென்றால் அது பயங்கரமாக சத்தம் போடும். கால்களையும் இறக்கைகளையும் அடித்துக் கொள்ளும். ஆனால் புறாவைப் பிடித்தால் எவ்வித எதிர்ப்பையும் அது காட்டாது. ஆபத்து மிகவும் நெருங்கி வந்த பின்தான் பறந்து போகும். புறா எதிர்த்து போராடாது.

"...புறாக்களைப் போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத்தேயு 10:16) என்று வேதம் சொல்கிறது. உள் மனதிலும், வெளியே பேசுவதிலும் ஒன்று போல பேசுவதும், செயல் படுவதுமான குணம் கபடற்ற குணம். புறாவை போல கபடற்றவர்களாக வாழுங்கள்.

## ஒரே கவனம் - SINGULAR FOCUS

புறாவின் தலை குறுகியதாக இருப்பதால் அவற்றால் ஒரே நேரத்தில் ஒரு பொருளின் மீது மட்டுமே கவனம் செலுத்த முடியும். எனவே புறா எப்பொழுதும் ஒரே கவனத்தோடு தான் இருக்கும்.

"உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது; உன் கண்ணிமைகள் உனக்கு முன்னே செவ்வையாய் பார்க்கக்கடவது" (நீதிமொழிகள் 4:25)

**அன்பான வாலிபர்களே! புறாவைப் போல கபடற்றவர்களாகவும், நேர் கொண்ட பார்வையோடு கவனமாக அதே பாதையில் ஓடுங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார் ●**

# ஜெபக்கேடயம்

ஜெபம் எஸ்தர்

## பொதுத் தேர்வு



தமிழகத்தில் 2021-2022ஆம் ஆண்டிற்கான பொதுத் தேர்வு 12 ஆம் வகுப்பிற்கு மே மாதம் 5ஆம் தேதி ஆரம்பித்து, மே மாதம் 28 ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு மே மாதம் 6ஆம் தேதி முதல் 30ஆம் தேதி வரையும், 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு மே மாதம் 9ஆம் தேதி ஆரம்பித்து மே மாதம் 31ஆம் தேதி வரை நடைபெறுகிறது. செயல்முறை தேர்வுகள் (Practical exam) ஏப்ரல் 25ஆம் தேதி ஆரம்பித்து மே மாதம் 2ஆம் தேதி வரை நடைபெறுவதாக அரசு அறிவித்துள்ளது. 10ஆம் வகுப்பில் சுமார் 9 லட்சம் பேரும், 11ஆம் வகுப்பில் 8 லட்சத்து 49 ஆயிரம் பேரும், 12ஆம் வகுப்பில் 8 லட்சத்து 36 ஆயிரம் பேர் என 23 லட்சம் மாணவ மாணவியர் தேர்வு எழுத உள்ளனர்.

### ஜெபக் குறிப்புகள்

1. பொதுத் தேர்வு எழுதப் போகும் சுமார் 23 லட்சம் மாணவர்களுக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், விவேகத்தையும் கொடுக்க ஜெபிப்போம்.
2. பொதுத் தேர்வைக் குறித்த பயத்தோடு இருக்கும் ஒவ்வொரு மாணவர்களின் பயங்கள் விலகி நல்ல முறையில் தேர்வு எழுத ஜெபிப்போம்.
3. தேர்வுக் காலங்களில் மாணவர்களுக்கு எந்தவிதமான வியாதியோ, குடும்பங்களில் பிரச்சனைகளோ வராதபடி தேவ பாதுகாப்பு உண்டாக ஜெபிப்போம்.
4. எல்லா மாணவர்களுக்கும் படிக்கிற பாடங்கள் மனதில் ஆழமாக பதியவும், நல்ல ஞாபக சக்தி உண்டாகவும் ஜெபிப்போம்.
5. பொதுத் தேர்வு எழுதும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் தொடர்ந்து என்ன படிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை உண்டாக்க அரசு நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

## கருக்கலைப்பு



இந்தியாவில் 1000 கர்ப்பிணிகளில் 13 பெண்களுக்கு கருக்கலைப்பு ஆகிவிடுகிறது. இந்த 13 பெண்களில் 5 பெண்களுக்கு தானாகவே கருக்கலைகிறது. ஆனால், மீதி 8 பெண்கள் தாங்களாகவே முன் வந்து கருவை கலைக்கிறார்கள். "இன்றைய வாழ்க்கைச் சூழலில் கருக்கலைப்பு அதிகரித்துக் கொண்டே போகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் கருக்கலைப்பு மாத்திரைகள் மூலம் நடக்கும் சுமார் 78% கருக்கலைப்புகள் நடக்கிறது. இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் நடக்கும் 15.6 மில்லியன் கருகலைப்புகளில் சுமார் 78% அபார்ஷன்கள் மருத்துவ வசதி இல்லாததன் மூலம் நிகழ்கிறது, முக்கியமாக மருத்துவ கருகலைப்பு மாத்திரைகள் மூலம் என்ற தகவல் வெளியாகி உள்ளது

### ஜெபக் குறிப்புகள்

1. இந்தியாவில் பெண்களுக்கு ஏற்படும் கருக்கலைப்புகள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபிப்போம்.
2. தாங்களாகவே கருவை கலைக்கிறவர்களுக்குள் அது பாவம் என்கிற உணர்வு உண்டாக ஜெபிப்போம்.
3. கர்ப்பகாலத்தில் மருத்துவ வசதிகள் இல்லாமல் ஏற்படும் கருக்கலைப்புகள் நடைபெறாமல் தடுக்க, அரசாங்கம் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க ஜெபிப்போம்.
4. தகாத உறவுகளினால் ஏற்படும் கற்பங்களை கருக்கலைப்பு மாத்திரைகள் மூலம் அழித்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மனந்திரும்ப ஜெபிப்போம்.
5. கருவை கலைப்பதற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் போலி மருந்துகள், போலி மருத்துவர்கள் கண்டறியப்படவும் ஜனங்களுக்குள் விழிப்புணர்வு உண்டாகவும் ஜெபிப்போம்.

# எய்ட்ஸ் நோய்

உலகெங்கிலும் உள்ள நாடுகளில் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களில் அதிக எண்ணிக்கையில் இந்தியா 2 வது இடத்தில் உள்ளது.

உலகெங்கிலும் ஒவ்வொரு நாளும் 90 குழந்தைகளுக்கு புதிதாக எயிட்ஸ் நோய் வருகிறது.

இந்தியாவில் 5.13 லட்சம் பேர் இந்நோயால் பாதிக்கப் பட்டவர்கள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உலகம் முழுவதும் சுமார் 18 லட்சம் மக்கள் தடுப்பு மருந்து மூலம் எயிட்ஸ் நோயை எதிர்த்து போராடி வருவதாக உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.






## ஜெபக் குறிப்புகள்

1. எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் சுகம் பெற ஜெபிப்போம்.

2.இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறு குழந்தைகள் மேல் தேவ ஆளுகை உண்டாக ஜெபிப்போம்.

3. உலகம் முழுவது சுமார் 18 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேலும் யாரையும் இந்நோய் தாக்காதபடி ஜெபிப்போம்.

4. பாதிக்கப்பட்டவர்களுக்குள் காணப்படும் மனஅழுத்தம், விரக்தி, அவமானம், நிந்தைகள் மாறி, சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட ஜெபிப்போம்.

5. எயிட்ஸ் நோயை குறித்த விழிப்புணர்வு எல்லா மக்களுக்குள்ளும் உண்டாகவும், சரியான சிக்ச்சை முறைகள் கொடுக்க அரசாங்கம் தீர்வு எடுக்க ஜெபிப்போம்.

# எழுப்புதல் - கல்வித்துறை

இந்தியாவில் 14 லட்சம் பள்ளிகள் உள்ளன. 410 சர்வதேச பள்ளிகளும், 900 பல்கலைக்கழகங்களும், 40,000 கல்லூரிகளும் உள்ளன. இதில் 32 கோடி மாணவர்கள் படிக்கின்றனர்.








## ஜெபக் குறிப்புகள்

1. கல்வித் துறையில் மாபெரும் எழுப்புல் அக்கினி ஊற்றப்பட்ட ஜெபிப்போம்.

2. பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவியர் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

3.மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்க அரசு ஆவன  செய்யவும், மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் அடிப்படை கல்வி வசதிகள் செய்யப்படவும் ஜெபிப்போம்.

4. கல்வித் துறையில் பணிபுரியும் ஒவ்வொரு அதிகாரிகள், அமைச்சர்கள் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

5.கல்வித் துறையில் காணப்படும் ஊழல் லஞ்சம் அழிக்கப்படவும், கர்த்தருடைய ஆளுகை உண்டாகவும் ஜெபிப்போம்.

நிகழ்வு: கெத்சி கிளார்லின்

# ஜெபிப்போம் ஜெயமெடுப்போம்

ஜெபத்தில் பல பகுதிகள் உண்டு. அவற்றில் முக்கியமானது மற்றவர்களுக்காக நாம் கண்ணீரோடு ஜெபிக்கும் மன்றாட்டு ஜெபமே ஆகும். இப்படிப்பட்ட மன்றாட்டு ஜெபம் ஒவ்வொரு விசுவாசியின் தனி ஜெபத்திலும், ஜெபக்குழுவிலும், சபைகளிலும் ஏறெடுப்பது அவசியமானது.

## மன்றாட்டு ஜெபம் என்பது என்ன?

தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் நின்று தேவனின் கோபாக்கினை மனிதனின் மீது வராதபடி அவர்களின் மீட்பிற்காகவும், மன்னிப்பிற்காகவும் பாரத்தோடு அழுது ஜெபிப்பது.

## எக்காரணத்திற்காக நாம் மன்றாடி ஜெபிக்கலாம்?

- தேவ கோபத்தை ஆற்றுவதற்கு (சங். 106:23)
- அடிமைத்தனத்திலிருந்து மற்றவர்களை விடுவிப்பதற்கு (எண். 20:16)
- எதிரியின் திட்டங்களை முறியடிப்பதற்கு (1 சாமு. 7:5,10)

## மன்றாடி ஜெபிப்பவர்களுக்கு இருக்கவேண்டிய ஆயத்தங்கள் என்னென்ன?

- சுற்றி நடக்கும் நிகழ்வுகளை பார்க்கும் பொழுது அவற்றின்மீது மனதுருக்கமும், ஆத்தும பாரமும், மெய்யான கரிசனையும் உண்டாக வேண்டும். தேவனின் இருதய துடிப்பை உணருதல் அவசியம்.
- சாத்தானை எதிர்க்க திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தங்களின் சுயம், உலக ஆசை, இச்சை முதலியவற்றை சிலுவையில் அறைந்திருப்பது அவசியம்.
- தேவனோடு நெருக்கமான உறவு இருக்க வேண்டும். (ஒருவனும் தேவன் தன்னுடனே இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான்). யோவான் 3:2.
- ஜெபத்தின் முடிவில் நம்மை இயேசுவின் இரத்த கோட்டைக்குள் மறைத்து, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்வது நமக்கு பாதுகாப்பு அளிக்கும்.



கர்த்தரால் தெரிந்துக்கொள்ளப்பட்ட மோசே, ஆபிரகாம் போன்ற பலர் நம் முன்னே மன்றாட்டு வீரர்களாய் வாழ்ந்து காட்டினர். எனவே இந்த நூற்றாண்டின் மன்றாட்டு வீரர் நீங்கள் தான்!

**தேவனின் கோபாக்கினை தேசத்தின் மீது வராதபடிக்கு திறப்பிலே நிற்கவும், நரகத்தை நோக்கி விரைந்தோடும் மாந்தர்களை மீட்டு பரலோக பாதையில் நடத்தவும் தேவன் தெரிந்துக்கொண்ட பாத்திரங்கள், இதை வாசித்துக் கொண்டிருக்கும் வாலிபராகிய நீங்கள் தான். மற்றவர்களுக்காய் மன்றாடி ஜெபிக்க உங்களை இன்றைக்கே அர்பணிப்பீர்களா?** ●



# Petra
## பேதுருவோடு ஒரு பயணம்...
பகுதி 3

**கடந்த மாதம் பேதுருவோடு கடலில் பயணித்த நீங்கள் இந்த மாதத்தில் பேதுருவோடு தாபோர் மலைக்கு Trekking போக ரெடியா? (மத். 17; மாற்கு 9; லூக்கா 9:28-36).**

இயேசு கிறிஸ்து தனது நெருங்கிய சீடர்களான பேதுரு, யோவான் மற்றும் யாக்கோபுடன் ஜெபம் பண்ணுகிறதற்கு ஒரு மலையின் மேல் ஏறினார். அந்த மலை தாபோர் மலை என்று கருதப்படுகிறது. இந்த மலை கலிலேயாக் கடலில் இருந்து மேற்கே சுமார் 18 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு பல யுத்தங்கள் நடந்திருக் கின்றன. பாலாக்கும், தெபோராவும் இணைந்து சிசேராவை வென்றது இந்த பகுதியில் தான் (நியா. 4:6,12). இந்த மலையில் இயேசு ஜெபம் பண்ணும்போது, அவருடைய முக ரூபம் மாறிற்று. அவர் முகம் சூரியனைப் போல பிரகாசித்தது. அவருடைய வஸ்திரம் வெளிச்சத்தைப் போல, உறைந்த மழையைப் போல பூமியிலே எந்த வண்ணானும் வெளுக்கக் கூடாத வெண்மையாய் பிரகாசித்தது. அப்பொழுது மோசேயும், எலியாவும் இயேசுவோடு பேசுகிறவர்களாக பேதுருவும் மற்ற சீஷர்களும் காண்கின்றனர். அதுவரை மோசேயையும் எலியாவையும் நேரில் கண்டிராத சீஷர்கள் அவர்களை அடையாளம் கண்டு கொண்டனர். அதுவே உன்னத அனுபவம். பரலோகில் ஒருவரும் ஒருவரையும் அறிமுகப்படுத்தும் அவசியம் கிடையாது. அவரவரே ஆவியின் வெளிப்பாட்டினால் உணர்ந்துக் கொள்வார்கள்.




மரணமடைந்து மீண்டும் உயிர்த்தெழ இருக்கும் தேவனுடைய அடியார்களின் பிரதிநிதியாக மோசேயும், மரணமடையாமல் பரலோகம் செல்லப்போகும் விசுவாசிகளின் பிரதிநிதியாக எலியாவும் காணப்பட்டனர் என்று வேத வல்லுநர்கள் கருதுகின்றனர். மோசே இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் செய்த சிறிய தவறினால் கானான் நாட்டிற்குள் அனுமதி மறுக்கப்பட்டது. சாதாரண மனிதனாக கானானுக்குள் செல்ல விரும்பிய மோசேக்கு அப்பொழுது அந்த சிலாக்கியம் கொடுக்கப்படவில்லை. ஆனால் அதைவிட சிறந்த சிலாக்கியமாக இயேசு மானிடனாக இருக்கும்பொழுது மகிமையிலே அவருடன் கானான் நாட்டில் உறவாடினார். இயேசு எருசலேமில் நிறைவேற்றப் போகிற அவருடைய மரணத்தைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேதுரு பல முக்கிய சம்பவங்கள் நிகழும் போது, எதைக் குறித்தும் கவலைப்படாமல் Casual-ஆக இருந்து தூங்கும் சுபாவம் உடையவர். உதாரணமாக, கெத்செமனேயில் மரணத்துக்கேதுவான துக்கத்தோடு ஆண்டவர் ஜெபிக்க கேட்டுக் கொண்ட போதும் தூங்கினார் (மத். 26:40). ஏரோதின் சிறைச்சாலையில் சங்கிலிகளினாலே கட்டப்பட்டிருந்தும் சேவகர் நடுவே நித்திரை பண்ணிக்

கொண்டிருந்தது போல (அப். 12:6) மறுரூப அனுபவத்திலும் பேதுருவும் அவரோடிருந்தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள் என்று வேதம் கூறுகிறது (லூக்கா 9:32). இருப்பினும் கூடாரப் பண்டிகையில் இருப்பது போன்று கூடாரங்களில் தங்கியிருப்பது நல்லது என்று பேதுரு கருதி, இயேசுவுக்கு ஒன்று, மோசேக்கு ஒன்று, எலியாவுக்கு ஒன்று என்று மூன்று கூடாரம் போடலாம் என்று தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் பயத்தில் கூறுகிறார். மறுரூப மலையின் அனுபவம் இன்பம் தான், ஆனால் மலை அடிவாரத்தில் பலவித தேவைகளோடும், பிரச்சனைகளோடும் விடுதலைக்காக ஏங்கி கொண்டிருக்கும் ஜனங்களையே இயேசு தேடிச் சென்றார். உன்னத அனுபவங்கள் அவசியமே. ஆனால் உன்னதரின் உன்னத நோக்கம் நிறைவேற வேண்டியது மிகவும் அவசியமே. அப்பொழுது ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவருக்கு செவி கொடுங்கள் என்ற குரல் மேகத்தில் இருந்து ஒலித்தது. யோர்தான் நதியில் ஆண்டவர் திருமுழுக்கு பெற்று கரை ஏறுகையில் ஒலித்த குரலாக பேதுரு உணருகிறார். அவர்கள் மலையில் இருந்து இறங்குகையில் மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும் வரைக்கும் நீங்கள் கண்டவைகளை ஒருவரிடமும் சொல்ல வேண்டாம் என்று இயேசுவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஒருவருக்கும் சொல்லாமல் அடக்கி வைத்திருந்தார்கள் (லூக்கா 9:36) என்று வேதம் கூறுகிறது. எதையும் மனதிற்குள் அடக்கி வைக்காமல் குழந்தையைப் போல வெளிப்படையாக பேசி விடும் பேதுரு, இந்த சம்பவத்தை மனதில் அடக்கி வைத்து பின்னொரு நாளில் தனது கடிதத்தில் எழுதுகிறார் (2 பேதுரு 1:17,18).



## மீன் வாயில் வெள்ளிப் பணம்

யூதர்களின் முறைமைப்படி ஆத்துமாக்களுக்காக பாவ நிவிர்த்தி செய்ய வேண்டுமானால், (யாத். 30:15) தேவாலயத்திற்கு வரி செலுத்த வேண்டும். கப்பர்நகூமில் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா என்று பேதுருவிடம் கேட்கின்றனர். இயேசு எந்த பாவமும் செய்யவில்லை. வரிப்பணம் செலுத்த வேண்டிய அவசியமுமில்லை. இருப்பினும் தான் போதகர் என்பதினாலோ, தேவ குமாரன் என்பதினாலோ வரி விலக்கு வேண்டுமென்று கேட்கவில்லை. வரி செலுத்த ஆயத்தமாகவே இருக்கிறார். போதகர் வரி செலுத்துகிறார் என்று நிதானமாக பதில் அளித்த பேதுரு, வரி செலுத்த பணம் இல்லையே என்ற கவலையோடு வீட்டிற்கு வருகிறார். உள்ளே நுழைந்த உடன் பேதுருவை அறிந்திருந்த தேவன் பணம் கிடைக்கும் அதிசய வழியை பேதுருவுக்கு கூறுகிறார். இயேசுவின் வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்து தூண்டில் போட்டு மீன் பிடிக்கிறார். வலை வீசி பல மீன்களை பிடிக்கும் பேதுரு, கடலுக்குப் போய் தூண்டில் போட்டு கிடைக்கும் முதல் மீன் வாயில் இருந்து வெள்ளிப் பணத்தை எடுத்து தனக்காகவும் இயேசுவுக்காகவும் வரிப்பணம் செலுத்துகிறார். ஒரு மனிதனையே விழுங்கும் திறன் கொண்ட மீன் இனம் (உதாரணம்: யோனா சம்பவம்) ஒரு சிறு வெள்ளிப் பணத்தை விழுங்கவும் இல்லை, துப்பவும் இல்லை, மாறாக வாயில் வைத்துக் கொண்டு தூண்டியில் வந்து சிக்கி பேதுருவின் பணத்தேவையை சந்தித்து, அதிசயத்திலும் அதிசயம் தானே?

**இன்னும் பல சுவாரஸ்யமான சம்பவங்களோடு பேதுருவோடு பயணம் தொடரும்...**

# Revival IGNITERS

## EVERY 1ST SUNDAY

**(3RD APRIL)**

**VELLORE (3 PM)**
Gethsamane Prayer Center, Ajantha Mahal, No.3,6th West Cross Road, Gandhi Nagar.
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:62 2nd Floor, Benny Kumaran Main Road.
9442082200

**TIRUPATI (3PM)**
Old Community Hall, West Church.
9985033401 | 9442885315

**TUTICORIN (3PM - 5:30 PM)**
Gethsemane Prayer Center, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram, (Land mark : South Police Station to Kamaraj college Road)
9442885315

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!!

## EVERY 2ND SATURDAY

**(10TH APRIL)**

**MADURAI (4:30 - 6:30PM)**
Gethsamane Prayer Centre 2/56, Upstairs, 1st Street, Main Road, Subramaniya Puram.
9750955548 | 0452-2677300

## EVERY 2ND SUNDAY

**(11TH APRIL)**

**AMBUR (3PM - 6PM)**
Concordia Hr.Sec.School, Opp Rly. Station.
9597927799 | 9442885315

**THANJAVUR (3:00PM)**
Gethsemane Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, M.C.Road.
9444381971 | 9488475315

**VILLUPURAM (3 - 6PM)**
Jesus Redeems Office Dhanalakshmi Garden Behind Lakshmi Hospital Villupuram .
8344411022 | 9442885315

**KOVILPATTI (3PM – 5.30PM)**
St. Paul's Matriculation School, Kovilpatti.
9750955548 | 9787322334

**ALANGULAM ( 2:30PM)**
P.M.V. Packiyavathy Building R.A. Nursing Institute SCV Computers (top floor) Main Road, Alangulam, Near Union Office Opposite.
9965377427 | 9750955548

IGNITERS

**THENI (2.30PM - 5 PM)**
Gethsamane Prayer Center, No.203, Madurai Road, (opp Anantham Silk) Dr. Kamaraj Hospital, 1st Floor.
9750955548 | 9976766422

**SURANDAI (2.30PM)**
Jawarhalal Middle School, Surandai.
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
Getsamane prayer Center
9677858766 / 9442906567

## EVERY 3RD SUNDAY
**(18TH APRIL)**

**TIRUNELVELI (2:30 PM)**
Gethsamane Prayer Center Shah Complex No: 43/R4, Rajendra Nagar Trivandrum Road.
9750955548 | 9488212915

**COIMBATORE (4PM)**
Gethsamane Prayer Center, No:90, 1st, Floor Arts College Rd., Near Charan Tower, Coimbatore.
0422 - 2309040 | 8903405315

**TRICHY (3PM)**
Gethsamane Prayer Center 22A, Ist Floor, Thennur High Rd., Near KMC Bus Stop, Thennur, 9488475315

**JEBAMALAI (2PM)**
Kadaiyam (via), Keelamathapuram, (TirunelveliDist).
8300131000 | 9750955548

**CHENNAI (3.30PM)**
VGP Victory House, Mount Road. 9488475315

**NALUMAVADI : (3-5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**DINDIGUL (3PM - 5:30 PM)**
CSI Sophia School, (Opp: Govt Hospital) Dindugal.
9750955548 | 6383015262

**THIRUVARUR (3:30 PM)**
Gethsamane Prayer Center, 1A/25B, Bypass Road (Opp Arasu Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3 - 6P.M.)**
Gethsamane Prayer Centre, MBT Road, Navalpur
9500283179 | 9442885315

## EVERY 4TH SATURDAY
**(24TH APRIL)**

**PERAMBALUR (5PM - 8 PM)**
Gethsamane Prayer Centre M K Complex 71, Venkatesapuram Near Bank Of Baroda, Trichy Main Road.
9788788512

## EVERY 4TH SUNDAY
**(25TH APRIL)**

**PERNAMBUT (3 PM- 6 PM)**
Revival Prayer Tower, V. Kotta Road, Pernambut, Vellore Dist.
9940854125 | 9442885315

**ERODE (4 PM - 6:30 PM)**
Gethsamane Prayer Center, No:216, Ist Floor Near Fire Service, Gandhiji Road, Erode.
9750722000

## MUMBAI (5PM - 8PM

1st sunday-Dharavi
2nd Sunday- Bhandup
3rd Sunday - Malad
9004882470

WE'RE GOING LIVE

APRIL. 25TH 3 TO 5PM - SUNDAY

Revival IGNITERS

IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH



Message and Prayer:
Bro. Mohan C. Lazarus




நிகழ்வு காலேப்

இந்த RED ALERT தொடரின் வாயிலாக நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் சந்திக்கும் தோல்விகள், பின்மாற்றங்கள், மற்றும் மனசோர்வு ஏற்படுவதற்கான காரணங்கள், வேதாகமத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதர்கள், செய்த சிறிய தவறினால் எப்படிப்பட்ட முடிவை அடைந்தார்கள் என்று நிதானித்து நம்மை நாம் சரி செய்து கொள்ளப் போகிறோம்.

கடந்த முறை ஆகான் என்ற மனிதன் தேவன் அருவருக்கிற தீட்டானப் பொருளை வஞ்சித்து வைத்ததினால் தன் தேசத்திற்கும், குடும்பத்திற்கும் இறுதியில் தனக்கும் பெரிய அழிவைத் தேடி கொண்டான் என்பதை பார்த்தோம். இந்த முறை, தீர்க்கதரிசி எலிசாவின் வேலைக்காரனாக இருந்த கேயாசியைப் பற்றி தியானிக்கப் போகிறோம். இவரை குறித்து 2 இராஜாக்கள் 4,5 அதிகாரத்தில் வாசிக்கலாம்.



கேயாசியைப் பற்றி சொல்லப்படும் போது அவன் எலிசாவின் வேலைக்காரன் என்று போடப்பட்டிருந்தாலும், இஸ்ரவேல் மற்றும் அதைச் சுற்றியுள்ள நாடுகள் அனைத்தும் அஞ்சுகிற ஒரு பெரிய தீர்க்கதரிசியான எலிசாவிற்கு பிரதிநிதியாகவே செயல்பட்டான். எலிசா, தான் போக வேண்டிய இடத்திற்கெல்லாம் தனக்கு பதில் பிரதிநிதியாக கேயாசியை அனுப்பினார் (2 இராஜா. 4:28,29). அது மாத்திரமல்ல, எலிசா செய்த இயற்கைக்கு மேற்பட்ட அற்புதங்களை அருகில் இருந்து பார்த்தவன். இவ்வளவு பெரிய ஸ்தானத்தில் தேவன் அவனை வைத்திருந்தாலும், அதின் முக்கியத்துவத்தை உணராமல் தேவனுக்குப் பிரியமில்லாத காரியத்தைச் செய்தான்.

## தன் எஜமானனை பின்பற்றாமல் உலகத்தை பின்பற்றினான்

நாகமான் என்கிற சீரிய ராஜாவின் படைத்தலைவன் தன் குஷ்டரோகம் நீங்க எலிசாவிடம் வந்தான். எலிசாவின் வார்த்தையின்படி யோர்தானில் ஸ்நானம் பண்ணின பின்பு தன் குஷ்டரோகம் நீங்க சுகமானான். தான் சுகமான சந்தோஷத்தில் பல வெகுமதிகளை எலிசாவிற்கு கொடுக்க முயன்ற போது, எலிசா அதை வேண்டாம் என்று நிராகரித்து விட்டார். ஏனென்றால் இஸ்ரவேலின் தேவனிடத்தில் பெற்றுக் கொள்ளும் எந்த நன்மையும் இலவசம் என்பதை நாகமானும், சீரியர்களும் அறிந்துகொள்ளவும், தேவனுடைய நாமம் புறஜாதிகள் நடுவே மகிமைப்படவும் அப்படி செய்தார். ஆனால் கேயாசியோ தேவன் செய்த அற்புதத்தை பார்க்காமல், நாகமான் வைத்திருந்த உயர்ந்த வஸ்திரங்களையும், வெள்ளியையும் இச்சித்து, அதை அடைய நாகமான் பின் சென்றான். எலியாவிற்கு வேலைக்காரனாக இருந்த எலிசா, தன் எஜமானுக்காக அனைத்தையும் விட்டு, எலியாவின் மேல் இருந்த அபிஷேகத்தை வாஞ்சித்து சென்று, இரட்டிப்பு மடங்கு அபிஷேகத்தைப் பெற்றார். ஆனால் கேயாசி அந்த அடிச்சுவடை பின்பற்றாமல், உலகத்தை பின்தொடர்ந்து தன் அழைப்பிலிருந்து விலகி சென்றான். இதை வாசித்துக் கொண்டிருக்கும் நாம் எதை பின்பற்றுகிறோம் என்று சற்று யோசித்து பார்க்கலாம் .







நம்மை தேவன் அழைத்த அழைப்பிலிருந்து விலக செய்ய அநேக காரியங்கள் (**mobile phone, social media, mobile games etc**) ஒவ்வொரு நாளும் எழும்பி கொண்டே தான் இருக்கிறது. அதை கவனிக்காமல், அதில் கால் வைத்துவிட்டால் பெரிய ஆபத்தில் சிக்கிக் கொள்ள நேரிடும். நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல், நீங்கள் என்னை பின்பற்றுகிறவர்களாயிருங்கள் (1 கொரி 11:1).

## பாவத்தை மறைத்து பொய் பேசினான்



எந்த ஒரு அடிமைத்தனமும் ஆரம்பத்தில் நன்மையாகவும் இனிமையாகவும் தோன்றும். ஆனால் சிக்கிக் கொண்டப் பின்பு, தான் செய்த பாவம் யாருக்கும் தெரியக் கூடாது என்பதற்காக அநேகப் பொய்களை சொல்ல வேண்டியதாக இருக்கும். கேயாசியும் தான் செய்த பாவத்தை மறைக்க தன் எஜமானனிடம் பொய் சொன்னான். எலிசா கேயாசியிடம் எங்கேயிருந்து வந்தாய் என்று கேட்டதற்கு, நான் எங்கும் போகவில்லை என்று பொய் சொன்னான். அவன் ஒரு மனிதனிடம் பொய் சொல்லவில்லை ஆனால் தேவ ஆவிக்கு விரோதகமாக பொய் பேசினான். தான் செய்த காரியத்தை யாரும் கண்டுபிடிக்க முடியாது என்று நினைத்தான். ''தன் பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்'' என்று நீதிமொழிகள் 28:13ல்



வாசிக்கிறப்படி, கேயாசி செய்த காரியத்தை தேவன் வெளிப்படுத்தினார். அதனால்தான் நாகமானின் குஷ்டரோகம் அவனை பிடித்தது. அது மாத்திரமல்ல அந்த குஷ்டரோகம் அவன் சந்ததியாரையும் தொடரும் என்று எலிசா சொன்னார்.

கேயாசியின் முடிவு பரிதாபமாக இருந்தது. அவன் இருதயத்தில் ''இதில் என்ன தவறு இருக்கிறது'' என்று உருவான ஒரு சிறிய எண்ணம், அது வளர்ந்து இச்சையாக மாறி, பாவத்தை பிறப்பித்தது. பின்பு அந்த பாவத்தை மறைக்க பொய் மேல் பொய் சொல்ல, தேவ கோபம் அவன் மேல் எழும்பி தனக்கும், தனக்கு பின்வரும் சந்ததிக்கும் சாபத்தைத் தேடிக் கொண்டான்.

**அன்பான வாலிபர்களே! ''இதில் என்ன தவறு இருக்கிறது'' உலகத்தில் யாரும் செய்யாததையா நான் செய்து விட்டேன் என்று நாம் துணிகரமாக செய்யும் சில காரியங்கள், நாம் பாவத்திற்கு மேல் பாவம் செய்ய வைத்து அதை மறைக்க பொய் சொல்லவும் தூண்டிவிடும் (பிசாசு பொய்யனும் பொய்க்குபிதாவுமாயிருக்கிறான்). இதனால் தேவன் நமக்கு வைத்திருக்கும் திட்டமும்,அழைப்பும் அதற்கான அபிஷேகமும் கொஞ்சம் கொஞ்சமாக மங்கி, நம்மை இருளுக்குள் தள்ளிவிடும்.**



**ஆகையால் நாம் எந்த காலத்தில் இருக்கிறோம் என்றும், எழுப்புதலில் நமக்கு தேவன் என்ன ஓட்டத்தை வைத்திருக்கிறார் என்றும் நிதானித்து பார்த்து, நம்முடைய வழிகளை சரி செய்துகொள்ளுவோம், எழுப்புதலில் தேவனுக்காக எழும்பி பிரகாசிப்போம். மீண்டும் அடுத்த** RED ALERT **பகுதியில் வேறொரு நபரைக் குறித்து தியானிப்போம்.**

**பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும், ஒலிவதோப்புகளையும், திராட்சைத் தோட்டங்களையும், ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?**

**(2 இராஜாக்கள் 5:26)** ●

சிறப்பு கட்டுரை: ரவி




# மீட்பின் தேவன்

**என் அன்புக்குரிய வாலிப தம்பி, தங்கையே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடுள்ள உறவில் அனுதினமும் முன்னேறும்படியாக ஜெபத்திலும், வேதவசன தியானத்திலும் நீங்கள் ஒவ்வொரு நாளும் வளர உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.**

நாம் மீட்கப்பட வேண்டுமா? நாம் மீட்கப்படும்படியாக எதில் சிக்கியிருக்கிறோம்? நாம் மீட்கப்படும்படியாக என்ன செய்யப்பட்டது? அது யாரால் செய்யப்பட்டது? எதனால் செய்யப்பட்டது? என்பதான பல கேள்விகளுக்கான பதிலை இக்கட்டுரையில் ஆராய்வோம்.



## முதல் காரியமாக, நாம் ஏன் மீட்கப்பட வேண்டும்? நாம் எதில் சிக்கியிருக்கிறோம்?

"...யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே" (ரோமர் 3:9) என்றும், "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களானோம்" (ரோமர் 3:23) என்றும் வேதம் சொல்கிறது. இதுபோல சங்கீதக்காரன், "...என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங்கீதம் 51:5) என்று சொல்கிறார். மேற்சொல்லிய எல்லா வசனங்களும் பூமியில் பிறக்கும் எந்தவொரு ஆத்துமாவும் பாவத்தில் பிறக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது. இதற்கு சான்றாக, "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (மத்தேயு 15:18) என்று இயேசு சொல்கிறார். ஆகவே மனுகுலம் எல்லாருமே, துர்குணமுள்ள இருதயத்தோடு அல்லது பாவம் செய்யக்கூடிய இருதயத்தோடுதான் பிறக்கிறோம் என்பது தெளிவாகிறது. இதற்கு நடைமுறைச் சான்றாக, ஒரு மூன்று வயது குழந்தையிடம் "இதைச் செய்தாயா? இல்லையா?" என்று சற்று அதட்டிக் கேட்கும்போது, அக்குழந்தை பொய் சொல்வதை நாம் எல்லாரும் பார்த்திருக்கக் கூடும். இது எப்படி சாத்தியம்? காரணம், பொய் என்கிற வார்த்தையின் அர்த்தம்கூட அந்தக் குழந்தைக்கு தெரியாது. ஆனால் மூன்று வயதிலேயே அக்குழந்தையால் பொய் சொல்ல முடிகிறது. இதுவே பூமியில் பிறக்கும் எல்லா மனுஷ உயிர்களும் பாவத்தில் பிறக்கிறோம் என்கிற வேத வசனங்களுக்கு சான்றாகும்.

## இந்த பாவத்தில் நாம் எப்படி சிக்கினோம்?

இதற்கான பதில் ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, தேவன் படைத்த முதல் மனிதனான ஆதாம் பாவம் செய்ததினிமித்தம் அவனிலிருந்து தோன்றின எல்லாரும், அதாவது நாம் அனைவரும் பாவத்தில் பிறக்கும்படியாயிற்று. இதைத்தான் பவுலடிகள், "அப்படியிருந்தும், மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது..." (ரோமர் 5:14) என்று தெளிவாய் விளக்குகிறார்.



## இப்பாவத்திலிருந்து நாம் ஏன் மீட்கப்பட வேண்டும்?

நாம் தேவனால் படைக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதம் தெளிவாக சொல்கிறது. இதற்கு ஆதாரமாக பல சான்றுகள் இருக்கிறது. ஆகவே தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட நாம் படைத்தவருக்கு முன்பாக நியாயத்தீர்ப்பு



அடையும்படி நிற்க வேண்டும் என்று ரோமர் 2:6 மற்றும் "அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது" (எபிரெயர் 9:27) என்றும் வேதம் சொல்கிறது. அதுபோல, "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2 கொரி. 5:10) என்று வேதம் சொல்கிறது. பாவத்தில் பிறந்த நாம் பரிசுத்தமும், பூரணமுமான தேவாதி தேவனுடைய பிரசன்னத்தில் எப்படி வரமுடியும். ஆகவே அவரோடு சேரவும், அவர் பிரசன்னத்தில் வரவேண்டுமேயென்றால் நாம் மீட்கப்பட வேண்டும். பாவத்தின் தண்டனைக்கு நாம் தப்ப வேண்டுமென்றால் நாம் மீட்கப்பட வேண்டும்.

## நம்மை தேவன் எப்படி மீட்டார்?

நம் மாநிலத்தின் முதல் மந்திரியை (Chief Minister) ஒருவர் பார்க்க வேண்டுமென்றால், முதல் மந்திரி அந்த நபருக்கு நேரம் ஒதுக்கி வா என்று சொல்லும் நாளிலும், அந்நேரத்திலும் அந்த நபர் போய் அவரைச் சந்திக்க வேண்டும். அலுவலக வாயிலைச் சேரும்போது, வாயில் காப்பாளன் அவரை நிறுத்தி, உங்களை வரச் சொன்னாரா என்று கேட்டு அந்தச் சீட்டைக் காட்டினாலே, அந்த நபர் உள்ளே அனுமதிக்கப்படுவார். இதுபோலவே தேவனோடு நாம் சேரும் வழியை தேவன்தாமே உண்டாக்கினார். நம்முடைய பாவத்தில் இருந்து நம்மை மீட்கும் பொருளாக, தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய இடத்தில், நம்முடைய பாவத்தின் தண்டனையை அடையும்படிக்கு பாவ நிவாரணபலியாக ஒப்புக் கொடுத்தார் "… மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோமர் 8:3) என்று வேதம் சொல்கிறது. அதுபோல, "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் (இயேசுவுக்குள்) நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே. 1:7) என்று வேதம் சொல்கிறது. ஆம் நண்பர்களே, நம்மை மீட்கும்பொருளாக தேவன் தம் சொந்தக் குமாரனையே ஒப்புக் கொடுத்திருக்கிறார்.



**அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் (இயேசுவுக்குள்) நமக்கு உண்டாயிருக்கிறது**

## தேவன் எதற்காக நம்மை மீட்டார்?

இக்கேள்விக்கானப் பதில் ஒரே வார்த்தையில் அடங்கி விடும். அவ்வார்த்தைதான் "அன்பு". ஆம் வாலிபர்களே, "நாம் பாவிகளாயிருக் கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோமர் 5:8) என்று வேதம் சொல்கிறது. இயேசுசிலுவையில் மரிக்கும்போது, அவர் பக்கம் இருந்த திருடன் அவரை நிந்தித்தான். அவனுக்கு பதிலாக மறுபக்கம் இருந்த திருடன், "நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக் குத்தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாத தொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டான்" (லூக்கா 23:41) என்று வேதம் சொல்கிறது.



**ஆம் என் சகோதர, சகோதரிகளே, நாம் செய்த தவறுகளுக்கு பெற வேண்டிய நியாயமானத் தண்டனையை நம்மீது அவர் கொண்ட அந்த அன்பினால் தன்மேல் ஏற்றுக் கொண்டு நம்மை மீட்டார். இந்த அன்பின் தேவனாகிய இயேசு கிறிஸ்துவை இதுவரை நீங்கள் உங்கள் சொந்த இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக் கொள்ளாதிருப்பீர்களேயானால், இந்நேரமே உங்கள் இருதயத்தின் கதவுகளைத் திறந்து அவரை உங்கள் மீட்பராக ஏற்றுக் கொள்ளுங்கள்! ●**

# செய்திகள்!

**முதுகலை படிக்காமல் நேரடியாக பி.எச்.டி படிக்கலாம்!**

## 4 ஆண்டு பட்டப்படிப்பு அறிமுகம்!

முதுகலை பட்டம் பெறாமல் நேரடியாக 'பி.எச்.டி' படிக்கும் வகையில், 4 ஆண்டு கால இளநிலை பட்டப்படிப்பை பல்கலைக் கழக மானியக் குழு அறிமுகம் செய்ய உள்ளது.

புதிய தேசிய கல்விக் கொள்ளையை அறிவித்துள்ள ஒன்றிய அரசு, அதை அமல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருகிறது. தற்போது, இளநிலை, எம்.ஏ., எம்.எஸ்.சி. போன்ற முதுகலை பட்டப்படிப்புகளை முடித்த பிறகே, பி.எச்.டி எனப்படும் முனைவர் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும். இதை தவிர்க்கும் வகையில், 4 ஆண்டு இளநிலை படிப்புகளைக் கொண்டு வர முடிவு செய்துள்ளது. இதை முடித்தால், முதுகலை படிக்காமல் நேரடியாக பி.எச்.டி படிப்பில் சேரலாம். அதே நேரம், ஏற்கனவே அமலில் உள்ள 3 ஆண்டு கால இளநிலை படிப்பும் தொடரும். விருப்பப் படுபவர்களுக்கு மட்டுமே இந்த 4 ஆண்டு கால முதுகலை படிப்பும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்த 4 ஆண்டு கால படிப்பை நேரடியாகவோ அல்லது ஆன்லைன் மூலமாகவோ, தொலைதூரக்கல்வி மூலமாகவோ படிக்க முடியும்.

இது குறித்து பல்கலைக் கழக மானியக்குழு (யுஜிசி) தலைவர் எம்.ஜெகதேஷ் குமார் கூறுகையில், ”இளங்கலைக் கல்வியில் தற்போதுள்ள கட்டமைப் பில் பல பிரச்சனைகள் உள்ளன.

இன்றைய கல்வி முறையில் குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்றவர் என்பதை விட பல திறன்களைக் கொண்ட மனித வளங்களை நிறுவனங்கள் தேடுகின்றன.

எனவே, மாணவர்களின் எதிர்கால தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பொதுக் கல்வியின் பாடத்திட்டம் மாற்றப்பட வேண்டும்” என்றார்.

புதிய 4 ஆண்டு இளநிலை படிப்பின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

- இந்த 4 ஆண்டு கால படிப்பில் சேருபவர்கள், விரும்பிய நேரத்தில் பாதியில் வெளியேறி மீண்டும் எந்த உயர் கல்வி நிறுவனத்திலும் படிப்பை தொடரலாம்.
- இந்தப் படிப்புக்காக சில பாடங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.
- 3 செமஸ்டர் முறையில் தேர்வுகள் நடத்தப்படும்.
- 4 ஆண்டு பாடத்திட்டத்தல் 160 கிரெடிட்கள் வழங்கப்படும். 15 மணிநேர வகுப்பறை கற்பித்தலுக்கு ஒரு கிரெடிட் கணக்கிடப்படும்.
- 7வது செமஸ்டரின் தொடக்கத்தில், மாணவர்கள் ஆராய்ச்சி படிப்புகளை (பி.எச்.டி) மேற்கொள்ள முடியும்.
- 8வது மற்றும் இறுதி செமஸ்டரில் அவர்கள் 'மேஜர்' என்று அறிவிக்கப்படுவார்கள்.
- பி.எச்.டி. படிப்புக்கான மொத்த இடங்களில் 60 சதவீதத்தை நெட்/ஜே.ஆர்.எப் தேர்ச்சி பெற்ற மாணவர்களாலும், மீதமுள்ளவை பல்கலைக் கழகங்களால் நடத்தப்படும் நுழைவுத் தேர்வுகள் மூலமாகவும் நிரப்ப பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**- தினகரன், 18 மார்ச் 2022.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

JESUS REDEEMS MINISTRIES

50 கோடி சுவிசேஷம்
5 கோடி ஆதாயம்

VISION 2030

## இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் ஊழியம்

**10 கோடி**
வாலிபர்களுக்கு சுவிசேஷம்

**1 கோடி**
வாலிபர்களை இரட்சிப்புக்குள் வழி நடத்த
**15 மணி நேர ஜெபத்திட்டம்**

தினமும் இந்த தரிசனத்திற்காக
**30 நிமிடம் ஜெபிப்பேன்**

## ஜெபக்குறிப்புகள்

50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் தரிசனத்தை பெற்றிருக்கும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள், தேவ சித்தத்தை பரிபூரணமாக செய்து முடிக்க வேண்டிய கிருபையை தேவன் கொடுக்க ஜெபிப்போம்.

இந்த திட்டத்தை 2030ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டிய விசேஷித்த ஞானம், அபிஷேகம், பெலன் மற்றும் சுகம் அருளப்படவும், தேவன் கொடுத்த அனைத்து வாக்குத்தத் தங்கள் நிறைவேற்றப்படவும், சகோதரருக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

10 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் அறிவித்து, 1 கோடி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த பொறுபெடுத்திருக்கும் வாலிபர் ஊழியத்தின் முழுநேர ஊழியர்கள், இந்தியா முழுவதும் இருக்கும் REVIVAL IGNITERS, மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு, இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அபிஷேகமும், கிருபையும், வல்லமையும், ஆத்தும பாரமும் உண்டாக ஜெபிப்போம்.

**ஒரு கோடி** ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதற்கு **ஒரு கோடி மணி நேரம்** ஜெபிக்க புதிய ஜெப திட்டங்களையும், ஜெப வீரர்களையும், ஜாமக்காரர்களையும் தேவன் எழுப்பி தர ஜெபிப்போம்.

எஸ்தர் 8ஆம் அதிகாரம் 10ம் வசனத்தின்படி, ஒரு கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷத்தை தீவிரமாக கொண்டு சென்று, நற்செய்தி அறிவிக்கும் அஞ்சர்காரர்களை தேவன் எழுப்பவும், அவர்கள் தேசத்திற்குள் அனுப்பப்படவும் ஜெபிப்போம்.

ஊடகத்தின் (தொலைக்காட்சி, சமூக வலைத்தளம் ) மூலம் சுவிசே ஷத்தை தீவிரமாக எடுத்து செல்லவும், புதிய நிகழ்ச்சிகளை தயாரிக்கவும், தேவன் புதிய திட்டங்களை கொடுக்கும்படி ஜெபிப்போம்.

DAY - 1 DAY - 2 DAY - 3 DAY - 4
DAY - 5 DAY - 6 DAY - 7 DAY - 8
DAY - 9 DAY - 10 DAY - 11 DAY - 12
DAY - 13 DAY - 14 DAY - 15 DAY - 16
DAY - 17 DAY - 18 DAY - 19 DAY - 20
DAY - 21 DAY - 22 DAY - 23 DAY - 24
DAY - 25 DAY - 26 DAY - 27 DAY - 28
DAY - 29 DAY - 30

Name............................................................

Mobile..........................................................

Place...........................................................

நீங்கள் ஜெபித்தவுடன் எங்களுக்கு photo எடுத்து 97509 55547 என்ற whatsapp நம்பருக்கு அனுப்பவும்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847.
Postal Registration No: TTN/26/2020-2022.
Date of Publication: 25 - 03 - 2022.
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO- 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2020-2022.

# தேர்வு எழுதும்
## மாணவர்களுக்கான சிறப்புப் பிரார்த்தனை





இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக கடந்த மார்ச் மாதம் வேலூர், திண்டுக்கல், பெரம்பலூர் மற்றும் ஜெபமலை ஆகிய இடங்களில் தேர்வு எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை நடத்தப்பட்டது. இதில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு தேர்வு பயம் நீங்கி நம்பிக்கையோடு கடந்து சென்றனர். சகோ. சாம் ஜெபராஜ், சகோ. அவினாஷ் மற்றும் சகோ. சதிஷ் செய்தியளித்து மாணவர்களுக்காக ஜெபித்தார்கள். கர்த்தருக்கே மகிமை!







